கல்கி
பொருளடக்கம்

மலர் 6 | 1946 டிசம்பர் 8 | விய வருஷம்
இதழ் 19 | | கார்த்திகை 23

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

"சொர்க்கமா? சொர்க்கத்துக்குப் போகலாம் என்று சொல்கிறீர்கள்? இந்த உலகத்தில் நல்ல அறிவாளிகளோடும் ரஸிகர்களோடும் பேசிப் பழகும் இன்பத்தைக் காட்டிலும் சிறந்த இன்பம் சொர்க்க லோகத்திலே இருக்கிறதா? அப்படி இருக்கிறது என்று யாராவது உறுதி கூறினீர்களானால், அப்புறம் சொர்க்கத்துக்குப் போவது பற்றி யோசிக்கலாம்!" என்ற கருத்தை உடைய பழந்தமிழ்ப் பாடல் ஒன்று உண்டு. அந்தப் பாடலின் உண்மையைச் சென்ற நவம்பர் மாதத்தில் பம்பாய் நகரில் உள்ள தமிழன்பர்கள் பலர் அநுபவத்தில் உணர்ந்தார்கள். ரஸிகமணி டி. கே. சி. அவர்களுடன் சுமார் இருபது நாள் பேசிப் பழகியது அவர்களுக்கு அந்தகைய நிறைந்த மனோநிலையை உண்டு பண்ணி யிருந்தது.



பம்பாய் விக்டோரியா டெர்மினஸ் ஸ்டேஷனில் ரஸிகமணி அவர்கள் ரயில் ஏறியபோது, பம்பாய்த் தமிழ் அன்பர்கள், பலர் வந்திருந்து அவருக்கு விடை கொடுத்து அனுப்பிய காட்சியை இந்த இதழ் அட்டைப் படத்தில் காணலாம்.

ரஸிகமணிக்குப் பக்கத்தில் கையைக் கட்டிக்கொண்டு தருணையில் கம்பீரமாய் நிற்பவர் ஸ்ரீ எஸ். ஏ. ஐயர். நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 'ஆஸாத் ஹிந்த்' அரசாங்கத்தில் விளம்பர மந்திரி பதவி வகித்துத் தமிழ் நாட்டின் பெருமை உயர்வதற்குக் காரணமா யிருந்தவர். எட்டயபுரத்தில் பிறந்தவர்; பாரதியாரின் உறவினர். தற்சமயம் பம்பாய்க் காங்கிரஸ் மந்திரி சபையின் விளம்பர இலாகா அதிகாரியாக இருக்கிறார்.

மற்றும் ரஸிகமணிக்குப் பின்னாலும் பக்கங்களிலும் நிற்பவர்கள் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த அன்பர்கள். அவர்களில் யாருக்குமே ரஸிகமணியைப் பிரிய மனமில்லை என்பதையும், பிரியமில்லாமலேதான் வழி அனுப்புகிறார்கள் என்பதையும் அவர்களுடைய முகபாவத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

மலர் 6

தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
—பாரதியார்

இதழ் 19

என்ன சேதி?

லண்டன் விஜயம்


பிரதம மந்திரி அட்லியின் அழைப்பை நமது தலைவர்கள் நிராகரித்து லண்டனுக்குப் போவதில்லை என்று முதலில் தீர்மானித்தபோது, "நன்றாக யோசனை செய்துதான் நமது தலைவர்கள் அவ்விதம் தீர்மானித்திருப்பார்கள்" என்று எழுதியிருக்கிறோம். ஆனால் பிரிட்டிஷ் மந்திரி சபையும் பிரதம மந்திரி அட்லியும் அவ்வளவு சுலபமாகத் தங்கள் முகத்தில் கரியைப் பூசிக்கொள்ளத் தயாராயில்லை. 'திட்டத்தில் மாறுதல் ஒன்றும் இல்லை; மரியாதைக்காக வந்துவிட்டுப் போங்கள்!" என்று அவர்கள் மன்றாடி வேண்டிக் கொண்டார்கள். நமது தலைவர்களும் அவ்வளவு தூரம் பிரிட்டிஷ் பிரதம மந்திரியை அவமானப்படுத்துவதில் பிடிவாதம் பிடிக்கத் தயாராயில்லை. காங்கிரஸ் தலைவர்களின் நாகரிகமும் பண்பாடும் அவ்வளவு தூரம் அவமரியாதை செய்ய இடங்கொடாதல்லவா? ஆகவே பிரதம மந்திரி அட்லி, "9உக்குள் இந்தியாவுக்குக் கட்டாயம் திரும்பிவிடலாம்" என்று வாக்குறுதி கொடுத்ததன் பேரில் ஜவாஹர்லால்ஜியும் சர்தார் பலதேவ சிங்கும் லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். ஜனாப் ஜின்னாவும் கடைசி நிமிஷத்தில் 'ஒரு ராங்கி பண்ணிவிட்டுப் பிறகு லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார். இந்தக் "கல்கி" இதழ் வெளியாகும்போது ஜவாஹர்லால்ஜி திரும்பி வந்திருக்கக் கூடும். மேற்படி அவசர லண்டன் விஜயத்தின் பலாபலன்கள் என்ன வென்பதும் ஒரு வேளை இதற்குள்ளே தெரிந்துபோயிருக்கலாம்.

வல்லபாயின் சபதம்

மீரத் காங்கிரஸில் பண்டித ஜவாஹர்லால் நேரு, "இரண்டு தடவை நாங்கள் ராஜீனாமா செய்யத் தயாராயிருந்தோம். இன்னும் பத்து நாள் வரையில் எங்கள் அரசாங்கம் நிலைத்திருக்குமோ என்னமோ தெரியாது!" என்று சொன்னதாகப் பத்திரிகையில் வெளியானபோது நமக்கெல்லாம் வயிற்றில் புளியைக் கரைத்தது. "ராஜீனாமா மோகம் நமது தலைவர்களை இன்னும் விட்டபாடில்லை போலிருக்கிறதே!" என்று கவலைப்பட்டோம். ஆனால் ஸ்ரீ வல்லபாய் படேல் பம்பாய்ப் பொதுக் கூட்டத்தில் கொடுத்திருக்கும் வாக்குறுதி அந்தக் கவலையைப் போக்கி நமக்குத் தைரியத்தை அளித்திருக்கிறது. "பொது ஜனங்களின் பலத்தினால் நாங்கள் இந்திய அரசாங்கத்தைக் கைப்பற்றி உட்கார்ந்து கொண்டோம். அது எப்படி ஆனாலும் நாங்கள் அந்த ஸ்தானத்தை விட்டு நகரப் போவதில்லை!" என்று வீர நெஞ்சு படைத்த வல்லபாய் கூறியிருக்கிறார். அதுமட்டுமல்ல; "வானமே இடிந்து விழுந்தாலும், பூமியே வெடித்துப் பிளந்தாலும் டிசம்பர் 9உ அரசியல் நிர்ணய சபை கூடியே தீரும்" என்றும் சபதம் கூறியிருக்கிறார். வல்லபாய் படேலுக்கு ஆயிரம் 'சபாஷ்!' சொல்கிறோம். என்ன தகராறு நேர்ந்தாலும், எத்தகைய நெருக்கடி முற்றினாலும் காங்கிரஸ் தலைவர்கள் ராஜீனாமா செய்வது என்கிற பேச்சே உதவாது. அவசியமானால், வைஸ்ராய் வேவலைக் கைது செய்து சிறைக்கு அனுப்பும்படி உத்தரவு போட நமது தலைவர்கள் தயாராயிருக்க வேண்டும்! அத்தகைய மனோதிடம் ஸ்ரீ வல்லபாய் படேலுக்கு உண்டு என்று நம்பியிருக்கிறோம்.

இந்தியாவுக்கு வெற்றி

ஏறக்குறைய ஒரு மாத காலமாக ஐக்கிய தேச மகா சபையிலே நடந்து வரும் தென்னாப்பிரிக்க இந்தியர் விவகாரத்



“இனி உணவுப் பொருள்களின் விலை உயராது” என்று சென்னை சர்க்கார் அறிவித்திருக்கிறார்கள். உணவுப் பொருள்களின் விலை ஏற்கெனவே ரொம்பவும் உயர்ந்து போயிருப்பதால் உயர்வதற்கு இனி இடமே கிடையாது என்பது பொது மக்களின் அபிப்பிராயம்.

னிலே, இந்தியாவுக்கு ஒரு முக்கியமான வெற்றி கிடைத்திருக்கிறது.

பிரிட்டன், அமெரிக்கா போன்ற பெரிய பெரிய வல்லரசுகளெல்லாம் தென்னாப்பிரிக்காவுக்குப் பக்கபலமாக நின்றும் ஒன்றும் பலிக்கவில்லை. இந்தியாவின் கட்சிக்கு ஆதரவாக பிரான்ஸும் மெக்ஸிகோவும் கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

இந்தத் தீர்மானம் நிறைவேறாமலிருப்பதற்காக ஜெனரல் ஸ்மட்ஸ் தம்மாலியன்றதையெல்லாம் செய்து பார்த்தார். மேற்படி விஷயம் தென்னாப்பிரிக்க சர்க்காரின் உள் நாட்டு விவகாரத்தைப் பொறுத்ததாகுமென்றும், ஆகவே அதை விசாரிப்பதற்கு ஐக்கிய தேச மகா சபைக்கோ அல்லது வேறு யாருக்குமே உரிமையில்லையென்றும் சொல்லிப் பார்த்தார். இந்தியப் பிரதிநிதி சொல்லுவதில் எள்ளத்தனைகூட உண்மையில்லையென்று அந்த சத்தியசந்தர் மழுப்பிப் பார்த்தார். முடிவில், ஐக்கிய தேச மகா சபைக் கூட்டத்தில் விவாதிப்பதற்குப் பதிலாக, சர்வதேசக் கோர்ட்டின் முடிவுக்கு விட்டு விட வேண்டுமென்றும் ஜகஜால வித்தை செய்து பார்த்தார். ஒன்றும் நடக்கவில்லை.


ஆனாலும் அத்தனை தேசங்களுக்கும் மத்தியில் தென்னாப்பிரிக்கா குற்றவாளி யென்பதை இந்தியா நிரூபித்திருக்கிறது.

நல்ல சந்தர்ப்பம்

மேற்படி குற்றத்தைப் போக்கிக் கொள்வதற்கும் உலகத்தின் முன்னே பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் மறுபடியும் நல்ல பெயர் எடுப்பதற்கும் வழி இல்லாமற் போகவில்லை. பிரான்ஸும் மெக்ஸிகோவும் சேர்ந்து நிறைவேற்றியிருக்கும் அந்தத் தீர்மானத்தில் அதற்கு தாராளமாக இடம் இருக்கிறது. தென்னாப்பிரிக்காவில் வாழும் இந்தியர்களை ஐக்கிய தேச சாசனக் கொள்கைக் கிணங்க நடத்த வேண்டுமென்றும் அடுத்த ஐக்கிய தேச மகாசபைக் கூட்டத்தின் போது இந்தியாவும் தென்னாப்பிரிக்காவும் தங்கள் தகராறைத் தீர்த்துக் கொள்வதற்காகச் செய்த சமரச முயற்சிகளைக் கூறவேண்டுமென்றும் மேற்படி தீர்மானம் கூறுகிறது.

பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு இந்தியாவுடன் சமரசமாகப் போவதற்கான ஏற்பாடுகளைச் செய்வாரென்று எதிர்பார்க்கிறோம்.

ஓடி வாங்கோ!



சென்னை சர்க்கார் மில் துணி ரேஷனை மேலும் மேலும் குறைத்து வருகிறார்கள். ஆளுக்கு ஐந்து கஜம் என்பது சென்னைச் சர்க்காரின் கடைசி உத்தரவு.

பதின்மூன்று பிரகஸ்பதிகள்

தேவலோகத்தின் அதிபதியான தேவேந்திரனுக்கு ஒரே ஒரு பிரகஸ்பதி மந்திரியாக இருந்தார். அது காரணமாகவே தேவேந்திரன் பல தடவை தேவலோக ராஜ்யத்தை இழந்து திண்டாட வேண்டியிருந்ததென்றும், தேவர்கள் எத்தனையோ கஷ்டப்பட்டார்கள் என்றும் புராணங்கள் சொல்லுகின்றன.

நமது சென்னை மாகாணத்திலோ தற்சமயம் பதின்மூன்று பிரகஸ்பதிகள் ஏக காலத்தில் மந்திரிகளாயிருந்து இராஜ்ய பரிபாலனம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய ஆளுகையின் கீழ்க் கூடிய சீக்கிரத்தில் "துணி உடுத்தியவர்கள் எல்லாரும் பைத்தியக்காரர்கள்!" என்று சொல்லக் கூடிய நிலைமை ஏற்படலாம் என்பதற்கு அத்தாட்சிகள் பெருகி வருகின்றன.

இந்தப் பதின்மூன்று பிரகஸ்பதிகளின் ஆட்சிக்கு உவமானம் சொல்ல வேண்டும் என்றால், குறைந்தது நானூறு வருஷத்துக்கு முன்னாலே போகவேண்டியிருக்கிறது. நானூற்றாண்டுக்கு முன்னால் டில்லி மாநகரில் முகம்மது துக்ளக் என்னும் பாதுஷா தனியரசு நடத்தி வந்தான். திடீர் திடீர் என்று அவனுடைய அபூர்வமான மூளையில் புதிய புதிய அதிசயமான யோசனைகள் உற்பத்தியாகும். "வண்டிக்கு முன்னால் குதிரையைப் பூட்டக் கூடாது; வண்டிக்குப் பின்னால்தான் பூட்ட வேண்டும்!" என்று ஒரு நாள் உத்தரவு போடுவான். அதை அந்தப் பிரஜைகள் நிறைவேற்றித்தான் ஆகவேண்டும். அந்தக் காலத்திலேதான் ஜட்கா வண்டிக் குதிரைகள் வண்டியைப் பின்னால் தள்ளிச் செல்லக் கற்றுக்கொண்டன என்பது சில சரித்திரக்காரர்களின் கருத்து! இது மாதிரியே இன்னும் பல வேடிக்கை வேடிக்கையான உத்தரவுகளைப் போடுவதும் அவற்றை உடனுக்குடனே மாற்றுவதும் அவனுடைய வழக்கமாயிருந்தது. ஒரு தடவை துக்ளக் பாதுஷா டில்லிப் பட்டணம் இந்திய சாம்ராஜ்யத்தின் தலைநகரமாயிருக்கத் தகுதியற்றதென்று தீர்மானித்தான். தெற்கே விந்திய மலைக்கு அருகில் புதிய தலைநகரத்தை ஸ்தாபிக்க உத்தேசித்தான். அந்தப் புதிய தலைநகருக்கு அவனும் மற்ற அரசாங்க அதிகாரிகளும் போனால் போதாதா? போதாது என்று சொல்லி டில்லி நகரத்துப் பிரஜைகள் எல்லாரும் புதிய தலைநகருக்குப் போக வேண்டும் என்று உத்தரவு போட்டான். பாதுஷாவின் உத்தரவு என்றால் அந்த நாளில் இலேசான காரியமா? அதை மீறுவது பற்றி எண்ணத்தான் முடியுமா? டில்லி நகர்வாசிகள் எல்லாரும் மூட்டை முடிச்சுகளுடன் புதிய தலைநகருக்குப் புறப்பட்டார்கள். பல நூறு மைல் தூரம் பிரயாணம் செய்து புதிய நகரத்துக்குப் போய்ச் சேருவதற்குள் அவர்களில் பாதிப் பேர் வழியிலேயே பிராணனை விட்டார்கள். பாதுஷாவுக்கு மட்டும் அத்தகைய ஆபத்து ஒன்றும் நேரவில்லை; பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்தான். ஆனால் ஒரு வருஷம் புதிய தலை நகரத்தில் வசிப்பதற்குள்ளே அவனுக்கும் போதும் போதும் என்று ஆகிவிட்டது. திரும்பவும் பழைய தலைநகருக்கே புறப்பட்டதோடு பிரஜைகளையும் புறப்படச் செய்தான். அந்தத் திரும்பும் பிரயாணத்தில் பாக்கிப் பாதிப் பேரும் உயிரை விட்டார்கள். முகம்மது துக்ளக்கும் அவனுடைய அதிகாரிகள் ஒரு சிலருந்தான் உயிரோடு டில்லியை அடைந்தார்கள்!

நமது சென்னை மாகாணத்தின் புண்ணியவசத்தினால் வாய்த்திருக்கும் மந்திரிகள் பதின்மூன்று பேர் இருக்கிறார்களே, அவர்களுடைய அருமையான ஆட்சியானது முகம்மது துக்ளக்கின் ஆட்சியோடு போட்டி போடுவதாயிருக்கிறது.

அதிலும் சென்னை மந்திரி சபையின் ஜவுளிக் கொள்கையும், அது சம்பந்தமாக அவர்கள் போடும் உத்தரவுகளும், மறு உத்தரவுகளும், மாற்று உத்தரவுகளும் அந்த முகம்மது துக்ளக் இந்தச் சென்னை மந்திரிமார்களிடம் பிச்சை வாங்க வேண்டும் என்று சொல்லக்கூடிய நிலைமையை உண்டாக்கியிருக்கிறது.

சமீபத்தில் மில் துணி பங்கீடு சம்பந்தமாக நமது பிரகஸ்பதி சர்க்கார் மேன்மேலும் சரமாரியாக விடுத்த அறிக்கைகளைப்பற்றி நேயர்கள் நன்கு அறிவார்கள். முதலிலே சென்னை நகர வாசிகளுக்கு அதிகத் துணியும் வெளியூர் வாசிகளுக்குக் குறைந்த துணியும் கொடுப்பதாகச் சொன்னார்கள். பிறகு, நகரவாசிகளின் துணியைக் குறைத்துக் கிராம வாசிகளின் துணியைச் சிறிது அதிகப்படுத்தினார்கள். அதற்குப் பிறகு எல்லாருக்கும் சரிசமனாக ஐந்து கெஜம் துணி என்றார்கள். கடைசியில், ''சாவகாசமாக யோசித்து உத்தரவு போடப்போகிறோம். அது வரையில் பழையபடியே இருக்கட்டும்'' என்றார்கள். ''பழையபடி'' என்றால், எந்தப் ''பழையபடி'' என்பது நன்றாக விளங்காமல் பொது ஜனங்களும் வியாபாரிகளும் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்விதம் மில் துணிப் பங்கீடு விஷயத்தை அந்தரத்தில் தொங்க விட்டு, கைத்தறித் துணி விலைக் கட்டுப்பாட்டைப் பற்றியும், டெக்ஸ்டைல் இலாகாவையே எடுத்து விடுவது பற்றியும், இன்னும் பல விஷயங்களைப் பற்றியும் நமது துக்ளக் சர்க்கார் யோசனை செய்து வருவதாகத் தெரிகிறது. எல்லாவற்றுக்கும் மேலாகச் சென்னை மந்திரிமார்களின் கவனத்தைக் கவர்ந்திருப்பது இந்திய சர்க்கார் இந்த மாகாணத்துக்கு ஒதுக்கி வைத்திருக்கும் புது ஆலைக் கருவிகளை என்ன செய்வது என்பதுதான்.

''சென்னை மாகாணத்துக்கென்று ஒதுக்கி வைத்த கதிர்களைச் சென்னைக்கு அனுப்பியே தீருவோம்'' என்று ஒரு வேளை இந்திய சர்க்கார் பிடிவாதம் பிடித்தால் என்ன செய்கிறது?

இந்த நெருக்கடியான பிரச்னையைக் குறித்துப் பதின்மூன்று பிரகஸ்பதிகளுக்குள்ளே முதல் பிரகஸ்பதி என்று பெயர் வாங்குவதற்குப் போட்டி போடும் கனம் கே. பாஷ்யம் அவர்கள் தமது அருமையான யோசனையைச் சொல்லியிருக்கிறார்:

''புதிய கதிர்களைப் பிடிவாதமாக இந்திய சர்க்கார் நமது தலையில் போட்டால், அவற்றைச் சென்னை சர்க்காரே வாங்கிக்கொண்டு சொந்தமாக ஆலை நடத்தும். அப்படி சென்னை சர்க்காரின் சொந்த ஆலைகளில் சொந்தமாக உற்பத்தி செய்யும் துணிகளை இங்கே ஜனங்களின் உபயோகத்துக்குத் தரமாட்டோம். இந்தோனேஷியா முதலிய அயல் நாடுகளுக்கு அனுப்பிவிட்டுப் பதிலுக்கு அந்த நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை வாங்கிக் கொள்வோம்.''

இவ்விதம் சட்ட மந்திரி சொல்லியிருக்கும் யோசனையின் முதற் பகுதியில் அதிசயமான விஷயம் ஒன்றுமில்லைதான். புதிய ஆலைகளை மட்டும் என்ன, ஏற்கெனவே வேலை செய்து வரும் ஆலைகளைக்கூடச் சர்க்கார் எடுத்து நடத்த வேண்டும் என்று நாமும் சொல்லியிருக்கிறோம்; இன்னும் பலரும் சொல்லி வந்திருக்கிறார்கள்.

''உற்பத்தியாகும் துணியை உள்நாட்டுக்குக் கொடுக்க மாட்டோம். வெளி நாடுகளுக்கு அனுப்பிப் பதிலுக்கு உணவுப் பொருள் வரவழைப்போம்'' என்று சொல்லியிருப்பதிலேதான், 'பிரகஸ்பதித்துவம்' பொங்கித் ததும்புகிறது!

இந்த மாகாணத்து மக்களுக்கு வேண்டிய துணி முழுதும் இப்போது இங்கே உற்பத்தியாகிறதா? இல்லை! வேண்டிய துணியில் மூன்றில் ஒரு பங்காவது உற்பத்தியாகிறதா? அதுகூட இல்லை.

சாதாரணமாக மக்கள் நாகரிகமாக வாழ்வதற்குத் தலைக்கு வருஷத்துக்கு முப்பது கெஜம் துணி வேண்டும்.

முப்பது கெஜம் என்றால் பிரமாதம் ஒன்றுமில்லை. முப்பது கெஜத்தில், பெண்களுக்குப் பதினாறு முழப் புடவை நாலு கிடைக்கும். ஆண்களுக்கு எட்டு முழ வேஷ்டி நாலும், நாலு ஜிப்பாவும், நாலு அங்கவஸ்திரம் அல்லது துண்டுகளும் கிடைக்கும்.

ஆனால் முப்பது கெஜத்துக்குப் பதிலாக இப்போது கிடைப்பது பத்து அல்லது பன்னிரண்டு கெஜம் துணிதான்! தேவையான துணிக்கு ரொம்பவும் குறைவாகக் கிடைப்பதனால்தான் கறுப்பு மார்க்கெட் முதலிய தொல்லைகள் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட நிலைமையில், ''புதிய மில்கள் நம்மீது திணிக்கப்பட்டால் அவற்றில் உற்பத்தியாகும் துணியை வெளி நாடுகளுக்கு அனுப்புவோம்'' என்று கூசாமல் சொல்லுகிறார் சட்ட மந்திரி பாஷ்யம்.

''பதிலுக்கு உணவுப் பொருள்கள் வாங்கிக் கொள்வோம்'' என்றும்

வெட்கமில்லாமல் சொல்கிறார் மதி மந்திரி பாஷ்யம்.

இந்தப் பதின்மூன்று பிரகஸ்பதிகள் இராஜ்யம் ஆண்டு வந்தால் இந்த மாகாணத்துக்கு வேண்டிய உணவுப் பொருள் இங்கேயே உற்பத்தியாகிற தென்பது எப்போதுமே கிடையாது போயிருக்கிறது. வயிற்றுச் சோற்றுக்கு வெளிநாட்டுக் கப்பல்களையே என்றென்றைக்கும் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது தான் போயிருக்கிறது!

வேண்டும்; வேண்டும். இப்படிப் பட்டவர்களை மந்திரிகளாகச் செய்த இந்த மாகாண ஜனங்களுக்கு இதுவும் வேண்டும், இதற்கு மேலும் வேண்டியதுதான்!

* * *

மேலே கூறிய ஜவுளிப் பங்கீடு அலங்கோலம், ஆலை ஒழிப்பு அசட்டுத் தனம் முதலியவற்றில் காந்தி மகாத்மாவின் பெயரும், புனிதமான கதர் இயக்கமும் அடிபட்டு அபகீர்த்திக்கு ஆளாகிறது என்பதுதான் மிகவும் வருந்தத் தக்க விஷயம்.

சென்னை சர்க்கார் ஆரம்பித்திருக்கும் ஆலை ஒழிப்புத் திட்டத்தை நாம் ஆட்சேபிப்பதற்கு முக்கிய காரணம் அதனால் கதர் இயக்கம் ஜனங்களின் வெறுப்புக்கு ஆளாகிக் கேடு அடையப் போகிறதே என்பதுதான்.

காந்தி மகாத்மாவின் யோசனையின் பேரிலேதான் மேற்படி திட்டத்தைச் சென்னை சர்க்கார் கொண்டு வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இதைப்பற்றி ஒரு விஷயம் சொல்லத் தான் வேண்டும்.

அந்த விஷயம் இதுதான்:—காந்தி மகான் என்ன சொல்கிறார் என்பதை அறிந்து கொள்வதற்கும், அவர் சொல்லும் திட்டத்தை நடத்தி வைப்பதற்கும் இப்போதுள்ள சென்னை மந்திரி சபைக்குச் சக்தியில்லை; யோக்யதையும் இல்லை.

சென்னை மந்திரி சபை காந்திஜியின் பெயரால் நடத்தி வைக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கும் கட்டாயக் கதர்த் திட்டம் ஒருநாளும் சரிவர நடக்கப் போவதில்லை.

அதனால் கதருக்குக் கெட்ட பெயர் ஏற்படுவதும், காந்தி மகாத்மாவைப் பலர் வீணாகக் குறை கூறுவதுந்தான் பலனாக ஏற்படப் போகிறது.

இதை முன்னிட்டுத்தான், அதாவது கதர் இயக்கத்தில் நமக்குள்ள பற்றுதலினாலும் சிரத்தையினாலுந்தான் சென்னை சர்க்கார் திட்டத்தை நாம் ஆட்சேபிக்கிறோம்.

காந்தி மகான் இலட்சிய புருஷர், குறைகளே இல்லாத மனித சமூகத்துக்குரிய இலட்சிய வாழ்க்கைத் தத்துவங்களை மகாத்மா அவ்வப்போது வெளியிடுகிறார்.

அந்தத் தத்துவங்களை உள்ளபடி அறிந்துகொண்டு, குறைகள் மலிந்த மனித சமூகத்தில் எவ்வளவு தூரம் அந்தத் தத்துவங்களை அமுலுக்குக் கொண்டு வரலாம் என்று முடிவு செய்ய அறிவும் ஆற்றலும் வேண்டும்.

பண்டித ஜவாஹர்லால், ஸர்தார் வல்லபாய் படேல், ராஜாஜி, ஆஸாத், ராஜேந்திர பிரஸாத் முதலியவர்களுக்குத்தான் அத்தகைய அறிவும் ஆற்றலும் உண்டு.

உதாரணமாக, "கலகங்களை அடக்குவதற்குப் போலீஸை உபயோகிக்கக் கூடாது" என்று மகாத்மா காந்தி பல தடவை சொல்லியிருக்கிறார். எல்லாவித பலாத்காரத்தையும் அஹிம்சையினாலேயே எதிர்க்க வேண்டும் என்பது மகாத்மாவின் திடமான கொள்கை. அதுவே அவருடைய வாழ்க்கையின் பிரதம இலட்சியம்.

ஆனால் காங்கிரஸ் ஆட்சி புரியும் எந்த மாகாணத்திலாவது போலீஸை ஒழித்து விட்டார்களா? அல்லது ஜவாஹரைத் தலைவராகக் கொண்ட இந்திய சர்க்கார்தான் கலகங்களை அடக்குவதற்கு அஹிம்சா தர்மத்தை மட்டும் கையாண்டு வருகிறார்களா? இல்லவே இல்லை.

ஏனெனில், இலட்சியப் புருஷராகிய மகாத்மா காந்தி சர்வோத்தமமான இலட்சியத்தைச் சொல்கிறார் என்றும், அதை உடனே காரியத்தில் அமுலுக்குக் கொண்டுவர முடியாதென்றும் மற்ற காங்கிரஸ் தலைவர்களுக்குத் தெரியும்.

கதர் வளர்ச்சியை முன்னிட்டு ஆலையை ஒழிக்கும் திட்டத்தையே எடுத்துக் கொள்ளலாம்.

ஸர்தார் வல்லபாயைக் காட்டிலும் மகாத்மாவின் அந்தரங்க அபிமானத்துக்குரிய சிஷ்யர் வேறு யாரும் இல்லை.

ஸர்தார் வல்லபாய் இன்று பம்பாய் மாகாணத்தின் முடிசூடா மன்னராய் விளங்குகிறார். அவர் என்ன சொன்

காலக்ஷேபப் பரிசு: சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர் என். வி. துரைசாமி, திருச்சூர்.

றும் அந்த மாகாணத்தில் உடனே நடக்கும்.

பம்பாய் மாகாணத்துக்கு அவர் ஆலை ஒழிப்புத் திட்டத்தைச் சிபார்சு செய்கிறாரா?

கிடையவே கிடையாது.

அதற்கு நேர்மாறான கொள்கையையே அவர் சிபார்சு செய்கிறார்.

நானது டிசம்பர்மீ 3உ பம்பாய்த் தொழிலாளர் கூட்டத்தில் பின்வருமாறு ஸர்தார் பேசியிருக்கிறார்:—

"ஆலைகள் மேலும் மேலும் பெருக வேண்டுமென்றும் அதிகமான தொழிலாளிகளுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்றும் அதன் பயனாகத் தேசத்தில் அமைதியும் சுபிட்சமும் நிலவ வேண்டும் என்றும் நாங்கள் (இந்திய சர்க்கார்) விரும்புகிறோம்." (பம்பாய்ப் ப்ரீ பிரஸ் ஜர்னல் 4-12-46 இதழ் 7-ம் பக்கம் பார்க்க.)

ஆலை பெருத்த பம்பாயில் ஸர்தார் வல்லபாய் இந்த மாதிரி பேசியிருக்கும்போது, சென்னை மாகாணத்தில்—தேவைக்கு மூன்றில் ஒரு பங்கு கூடத் துணி உற்பத்தி ஆகாத சென்னை மாகாணத்தில் — தற்சமயம் ஆலை ஒழிப்பைப் பற்றிப் பேசுவதில் அர்த்தம் உண்டா?

சென்னை மாகாணத்தில் சிற்சில பகுதிகளைக் கிராம நிர்மாண வேலைக்காகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ரொம்ப சரி. முதலில் அந்தப் பகுதிகளில் எல்லாரையும் நூற்கப் பண்ணி, எல்லாருக்கும் வேண்டிய கதரை உற்பத்தி செய்து, அந்தப் பகுதிகளில் துணிப் பஞ்சத்தை ஒழித்துப் பிரத்யட்சமாய்க் காட்டிய பிறகு, "இதே முறையை இம்மாகாணத்தின் மற்றப் பகுதிகளிலும் கையாளப் போகிறோம்" என்று சொன்னால், ஜனங்கள் அதை நல்ல முறையில் வரவேற்பார்கள். "பொல்லாத" பத்திரிகைக்காரர்கள் கூட ஆட்சேபிக்க மாட்டார்கள்.

அதைவிட்டு ஜனங்கள் ஒரு கெஜம் துணி வாங்குவதற்குத் திண்டாடிக் கொண்டிருக்கும் சமயத்தில், ஐந்து கெஜமும் இரண்டு கெஜமும் சர்க்கார் பங்கிட்டு செய்ய வேண்டியதாயிருக்கும் சமயத்தில், ஆலை ஒழிப்புப் பிரசாரம் செய்வது கலப்பற்ற மடமை என்று தான் சொல்ல வேண்டும்.


இந்த மடமைத்தனம் போதாது என்று, மேலே அதற்குச் சப்பைக் கட்டும் கட்டுகிறார்கள். அதாவது, "சென்னை சர்க்காரின் ஜவுளித் திட்டத்தை எதிர்ப்பவர்கள் ஆலை முதலாளிகள்தான்" என்று சொல்லுகிறார்கள். ஏன்?—கனம் பாஷ்யம் அவர்களே அவ்விதம் சொல்லியிருக்கிறார்.

புதிதாக வரப்போகும் கதிர்களைச் சர்க்கார் எடுத்துக் கொண்டு ஆலை நடத்துவதாகச் சொல்வது போல், இப்போது நடக்கும் ஆலைகளையும் சர்க்காரே எடுத்துக்கொண்டு நடத்தட்டுமே? யார் வேண்டாம் என்று சொன்னார்கள்? நிச்சயமாக நாம் சொல்லவில்லை. திவ்யமாக நடத்தட்டும் என்றுதான் சொல்கிறோம். கோடிக் கணக்கான ஜனங்களைப் பொறுத்த காரியத்தைப் பற்றிச் "சில ஆலை முதலாளிகளின் எதிர்ப்பு" என்னும் உண்மையற்ற வாதத்தைச் சொல்லுவானேன்?

* * *

பூர்வ ஜன்மங்களில் செய்த பாவத்தின் காரணமாக இந்த ஜன்மத்தில் கஷ்டங்கள் வரும்போது, அந்தக் கஷ்டங்களுக்குக் காரணம் "பிராரப்தம்" என்று சொல்லுவதுண்டு. ஆனால் நமது சென்னை மாகாணத்தில் அரசியலைப் பொறுத்த வரையில் சென்ற வருஷம் யாரோ சிலர் செய்த கர்மங்களின் பயனை இந்த வருஷமே பொது ஜனங்கள் அநுபவிக்கும்படி நேரிட்டிருக்கிறது. இன்னும் எத்தனை நாள் அத்தகைய பிராரப்தத்தை அநுபவிக்க வேண்டுமோ, எப்படியெல்லாம் அநுபவிக்க வேண்டி வருமோ, தெரியாது.

சென்னை மாகாணத்துக்கு ஏற்பட்டிருக்கும் இந்தச் சோதனை கூடிய சீக்கிரத்தில் முடிவுற்று விமோசனம் பிறப்பதற்கு ஆண்டவன் அருள் புரிய வேண்டும்.



உ

ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரின்
ஜெம்ஷட்பூரி விஜயத்தின்பொழுது

தமிழர்கள் மதராஸி ஸம்மேளனில் அளித்த வரவேற்புப்பத்திரம்

பாரதமக்கள் போற்றும் உத்தமரே!

எஃகு நகரிலே எங்களிடையில் தங்கள் வரவு அளவிலாமகிழ்ச்சியைத் தருகிறது. எங்களுடைய உள்ளம் சூரியனைக்கண்டதாமரை போல் மலர்ந்தது. தமிழர்களுடைய சிறந்த அறிவுத்திறமைக்கும் உயர்ந்த தேசபக்திக்கும் தாங்கள் இலட்சியமாகவும் சின்னமாகவும் விளங்குகிறீர். தங்கள் தலைமையின்கீழ் தமிழர்களாகிய நாங்கள் இன்று எல்லோருக்கும் சமமென இறுமாந்து நிற்கின்றோம்.

தமிழ்நாடு தழைக்கச்செய்த தலைவரே!!

"இரும்பைக்காய்ச்சி உருக்கிடுவீர்
இயந்திரங்கள் வகுத்திடுவீர்" என்ற பாரதியாரின் வாக்கைக் கடைப்பிடித்துப்பலநூறு மைல்களுக்கப்பால் உள்ள எஃகு நகரில் நாங்கள் வாழ்க்கையை நடத்திவருகிறோம். பாரத நாட்டிலேயே சிறந்த இந்த தொழிற்சாலையின் முன்னேற்றத்தில் எங்களுக்கும் பங்கு உண்டு; எனினும் எங்கள் திறன் குடத்தினுள் விளக்குப்போல் வெளியுலகில் பரவாதிருக்கிறது. இன்று தங்கள் வரவால் எங்கள் சமூகப்பண்பு உயர்பதவியை அடையுமென்று நம்புகிறோம் தாங்கள் வரவு நல்வரவாகுக!!


தந்நலம் கருதாப்புனிதரே!!!

ஆழ்ந்துகிடந்த தமிழ்மக்களைத்தட்டியெழுப்பி சுதந்திரப்போரில் முன்னணியில் நிறுத்திய தனிப்பெருமை தங்களுடையதே. பதவியிலே பற்றின்றி தேசத்தொண்டு புரியும் தாங்கள், பண்டித நேருவின் தேசீய அரசாங்கத்தில் கல்விமந்திரியாக அமர்ந்ததில் நாங்கள் பெருமை அடைகிறோம். தங்களுடைய மதிநுட்பத்தினாலும் செயலாற்றும் திறனாலும் பாரதநாடு புத்துயிர் பெறும் என்பதில் சந்தேகமில்லை. இறைவன் தங்களுக்கு நீண்ட ஆயுளை அளிக்குமாறு வேண்டுகிறோம். ஜெய் ஹிந்த்!!!

ஜெம்ஷட்பூரி
21-11-1946

இப்படிக்கு,
ஜெம்ஷட்பூரி தமிழர்கள்





ஜெம்ஷெட்பூரில் ராஜாஜி!

சென்ற 21-11-46 அன்று 'நாஷனல் மெட்டலர்ஜிகல் லெபரட்டரி' அஸ்திவாரக் கல் நாட்டு விழாவுக்கு ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஜெம்ஷெட்பூருக்குச் சென்றிருந்தபொழுது 'ஜெம்ஷெட்பூர் மதராஸி சம்மேளன'த்தார் தங்களுடைய சம்மேளனத்துக்கு அவரை அழைத்து உபசரித்தனர். சம்மேளனத்தின் சார்பாக அவருக்கு அன்புடன் வாசித்தளித்த உபசார பத்திரத்தை எதிர்ப் பக்கத்தில் காணலாம்.

பிறகு 'தக்ஷிண பாரத மஹிளா ஸமாஜம்' என்ற பெண்மணிகளின் சங்கத்தின் சார்பாக அவருக்கு ஒரு வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. அதில் "தியாக வாழ்வினாலும், மனத் தூய்மையாலும், அறிவாற்றலாலும் சிறந்த, ராஜதந்திரியாகிய உம்மைத் தலைவராகப் பெற்றது எங்கள் பாக்கியம். பாரத மகளிரது முன்னேற்றத்துக்குக் கல்வியும் கலைகளும் இன்றியமையாத துறைகளாகும். இந்திய தேசிய அரசாங்கத்தில் அந்தப் பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். "சிசுபாலனந்"துக்குச் சிறந்த வழிகளைப் போதித்து, "தெருவுக்கு ஒரு பிருந்தாவனம்" என்ற கனவைத் தந்த உமது உயர்ந்த மதி பாரத மக்களுக்கு நற்பயன் அளிக்குமென எதிர்பார்க்கிறோம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பிறகு ராஜாஜி அவர்கள் தமக்கு அளித்த உபசாரங்களுக்கு வந்தனமளித்து விட்டு, பேசியதின் சுருக்கம் வருமாறு:

"பலநாட்களுக்குப் பிறகு, தமிழ்ப் பிரசங்கங்களைக் கேட்பது எனக்கு ரொம்பவும் சந்தோஷத்தைத் தருகிறது. பூமியில், பலவிதமான ரத்தினங்களும் உலோகங்களும் அமிழ்ந்து கிடப்பதைப்போல், நம் பாரத நாட்டில் பல ஜாதிக்காரர்களும், பல பாஷைகளும் இருந்து வருவதைக் கண்டு நாம் சந்தோஷிக்க வேண்டும். உலகத்திலுள்ள எல்லா தேசங்களுக்கும் ஒரு சுதந்திர சர்க்காரை ஏற்படுத்துவது கூடச் சுலபம். ஆனால், இந்தியாவில் சுதந்திரத்தை ஸ்தாபனம் செய்வது ரொம்பவும் கடினம். எனினும், இந்தியாவின் பூரண சுதந்திரத்தை, சீக்கிரத்தில் ஸ்தாபிப்போம்.

தமிழர்களுக்கு நாடகமும், சங்கீதமும், அன்னத்தையும் ஜலத்தையும் போல் ரொம்பவும் அவசியம். அவைகளின் மூலம் தான், மதராஸிகள் எப்பொழுதும் மலர்ந்த முகத்துடனும், அதிக புத்தி கூர்மையுடனும் விளங்குகிறார்கள். ஜெம்ஷெட்பூரில் தமிழர்கள் 'வேதாத்யயனம்' பயில்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. வேதங்களில் சொல்லியிருக்கும் உண்மையைத் தமிழர்கள் நல்ல வழியில் உபயோகித்து, கோபம் முதலிய கொடிய தீய செயல்களை ஒழித்து, எப்பொழுதும் உண்மையே பேசித் தமிழர்களுக்கான உயர்ந்த கௌரவத்தையும், தனிப் பெயரையும், காப்பாற்றி வரும்படி கேட்டுக் கொள்கிறேன்."

கடைசியில் சிறு பெண் குழந்தைகள் பாரதியாரின் தேசிய கீதங்களைப் பாடிய பின் நிகழ்ச்சி இனிது முடிவடைந்தது.

நிகழ்ச்சிச் சித்திரம்



பம்பாயில் ரஸிகமணி

'சுபஸ்ரீ'

அதற்குப் பிறகு தினம் தினம் கூட்டங்கள்தான்; விழாக்கள்தான்; மாதுங்கா வீதிகளெங்கும் ஒரே தமிழ் முழக்கம்தான்! பம்பாய்த் தமிழன்பர்கள் ரஸிகமணி அவர்களைச் சும்மா இருக்க விடாமல், எவ்வளவு தூரம் பயன் படுத்திக் கொள்ள முடியுமோ அவ்வளவு தூரம் பயன்படுத்திக் கொண்டார்கள்.

'விருந்தும் மருந்தும் மூன்று நாள்' என்பது பண்டைக் காலத்துப் பழமொழி. அதைப் பொய் மொழியாக்கி விட்டனர், பம்பாய் அன்பர்கள். ஒரே நாளில் இரண்டு மூன்று இடங்களில் தமிழ்நாட்டுப் பெரியாருக்கு விருந்திட்டுத் தங்கள் அன்பினாலும், அறுசுவை உண்டியினாலும் அவரைத் திணற அடித்து விட்டார்கள். மாதுங்காவில் தமிழர்களால் நடத்தப்படும் மூன்று கல்வி ஸ்தாபனங்களுக்கும் அவரை அழைத்துச் சென்று பேச வைத்தார்கள்.

தினம் தினம் இரவு தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் கம்ப ராமாயணப் பாடல்கள் நிகழ்ந்தன.

ஒரு நாள் 'நான் கண்ட பாரதி' என்ற பொருள் பற்றி ரஸிகமணி உபன்யாசம் செய்தார்.

இன்னொரு நாள் திருக்குறள் வகுப்பு நடந்தது. "கேட்டால் இவரிடமல்லவா திருக்குறளைக் கேட்க வேண்டும்?" என்று சில ரஸிகர்கள் கூறி வியந்தது, என் காதுகளில் விழுந்தது. வந்தனோபசாரக் கட்டத்தில் காரியதரிசி கந்தசாமி, "கம்ப ராமாயணத்தை ரஸிகமணி பாடிக் காட்டிய போது கம்பரே வந்து விட்டார் என்று கூறினேன். அதை இன்று வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். இவர் கம்பராகவும் ஆகக் கூடும்; வள்ளுவராகவும் உருவெடுக்கக் கூடும்; வேண்டுமானால் பாரதியாகவும் மாறக் கூடும்!" என்று வீராவேசத்துடன் கூறி முடித்து 'டக்' என்று மேஜை மீது குத்துவதற்கும், மற்றவர்கள் கைதட்டி ஆர்ப்பரிப்பதற்கும் சரியாக இருந்தது.

மற்றொரு நாள் ஆர்வமுள்ள சில இளைஞர்களாகக் கூடி நிர்வகித்து வரும் கஸ்தூரிபா வாசகசாலையைத் தமிழ் நாட்டுப் பெரியார் பார்வையிட்டார்.

இதன் நடுவே, தாஜ்மஹால் ஹோட்டலில் பம்பாய்ப் பத்திரிகை ஆசிரியர்களாகச் சேர்ந்துகொண்டு ரஸிகமணிக்கு விருந்திட்டு மரியாதை செய்தார்கள்.

5. வந்தனோபசாரம்

நவம்பர் 17உ ஞாயிற்றுக்கிழமையன்று தென்னிந்தியப் பள்ளிக்கூடத்தின் பக்கம் மீண்டும் சென்றேன். ஏராளமான ஜனங்கள் திரண்டிருந்தார்கள். ஆனால் ஒவ்வொருவர் முகத்திலும் சோகக் குறி தாண்டவமாடியது.


"விருந்தாளிகள் திரும்பிச் செல்வது சகஜந்தானே! அதற்காக என் இப்படி வருந்துகிறீர்கள்?" என்று தமிழ்ச் சங்க நிர்வாகி ஒருவரைக் கேட்டேன்.

"வாஸ்தவம்; எத்தனையோ விருந்தாளிகள் வருகிறார்கள், போகிறார்கள்; ஆனால் இவ்வளவு தூரம் அணு அணுவாக எங்கள் அன்பைக் கவர்ந்தவர்கள் வேறு ஒருவருமில்லை. பர்சம் அதிகமானால் பிரிவு துக்கம் தருவது இயல்புதானே?" என்று ஒருவர் கூறியபோது, நிஜமாகவே அவருடைய கண்களில் நீர் ததும்பியது.

ஆனால், அன்று டி. கே. சி. விசேஷ உற்சாகத்துடன் காணப்பட்டார். வார்த்தைகள் தம்மை மீறிய வேகத்தில் வந்தன. உடல் நலத்தையும் பொருட்படுத்தாது மகிழ்ச்சிப் பெருக்கின் காரணமாக நின்று கொண்டே பேசினார்:—

"உங்களுடைய அன்பும், ஆர்வமும், ஆதரவும் என்னை ஒரு உற்சாக புருஷனாக மாற்றிவிட்டன. இப்படிப்பட்ட அன்புக் கயிற்றினின்று அறுத்துக்கொண்டு செல்வது எப்படி என்பதே எனக்குப் புரியவில்லை" என்று பிரிவுக்காக வருந்திவிட்டுப் பிறகு தம்மையும் கவியையும் பற்றிப் பேசத் தொடங்கினார்.

"தாய் பாஷையிலேதான் கவிதையை அநுபவிக்கலாம். வேறு பாஷைகளில் அநுபவிக்க முடியாது. 'தாய் மொழி அல்லாமல் பிற மொழிகளில் கவிதை இன்பத்தைக் காண முயற்சிப்பது, காதலியின் அன்பைப் பெறுவதற்கு வக்கீலின் உதவியைத் தேடுவதை யொக்கும்!' என்று



பம்பாய் நகரத்துக்கு ரஸிகமணி டி. கே. ஸி. அவர்கள் விஜயம் செய்து தமிழன்பர்களுக்குக் கவிதை விருந்து அளித்ததோடு, கலை விருந்து அளிப்பதற்கும் காரணமாயிருந்தார். முதல் நாள் தென்னிந்திய சங்கீத சபையின் ஆதரவில் ஸ்ரீ எஸ். ஏ. ஐயர் அவர்கள் தலைமையிலும், மறுநாள் ஷண்முகானந்த பைன் ஆர்ட் சபை ஆதரவில் ரஸிகமணியின் தலைமையிலும் குமாரிகள் ஆனந்தி - ராதாவின் பரத நாட்டியக் கச்சேரி நடைபெற்றது. இரண்டு நாளும் பம்பாய் ரஸிகர்கள் சபையில் எள் விழ இடமில்லாமல் கூடித் தமிழ்நாட்டின் ஒப்பற்ற அருங்கலையை உற்சாகமாக ரஸித்தார்கள்.

ரவீந்திரர் சொன்னார். தமிழில் படித்து அநுபவிப்பதற்கு எத்தனையோ அருமையான பாடல்கள் இருக்கின்றன. ஓர் உண்மையான கவிதையாயிருக்கும் பட்சத்தில் அது எளிதாகவும் இருக்கும். பொருள் செய்து கொள்ளவும் கஷ்டமிராது" என்று கூறிவிட்டு, மதுரையின் வளமையைக் கண்டு வாயில் விரல் வைத்து வியந்த ஒரு பட்டிக்காட்டானின் மன நிலைமையை விவரிக்கும் பாட்டை உதாரணமாக எடுத்துச் சொன்னார் :—

"காட்டுக் கலங் காணும்
கதிர் உழக்கு நெல் காணும்
மாடு கட்டிப் போரடித்தால்
மாளாது செந்நெல் என்று
ஆனை கட்டிப் போரடிக்கும்
அழகான தென் மதுரை!"

என்ற பாட்டை ரஸிகமணி பாடிக் காட்டிய போது, சபையோர் அனைவரும் பம்பாயை மறந்துவிட்டுத் தென் மதுரைக்கே போய் விட்டார்கள்.

கம்ப ராமாயணத்திலிருந்து, "தன்னை நோக்க உலகம் தளர்தற்றும்" என்ற பாடலைப் பாடி, கம்பன் கவிதையின் எளிய தன்மையைச் சுட்டிக் காட்டினார்.

டி. கே. ஸி. பேசி முடித்த பிறகு தமிழ்ச் சங்கத்தின் அங்கத்தினர் பலர் பேசினார்கள். சிலர் ரஸிகமணியின் நூல்களைப் புகழ்ந்து கூறினார்கள்; அவரது நீண்ட காலத் தமிழ்த் தொண்டைப் போற்றினார்கள். ஆனால் எல்லோருமே ஒருமுகமாக ஒன்றைச் சொன்னார்கள். "ஸ்ரீ டி. கே. ஸி. அவர்களுக்கு நீண்ட ஆயுளையும், ஆரோக்கி

யத்தையும் அளிக்க இறைவனை வேண்டுகிறோம். அத்துடன் ரஸிகமணி வருடா வருடம் பம்பாய்க்கு வந்து கொண்டிருக்க வேண்டுமென்று அவரையும் வேண்டிக் கொள்கிறோம்!" என்றார்கள்.

சரோஜா என்ற சிறுமி கார்லைல், டாகுர் போன்றவர்களின் பொன்மொழிகளை மேற்கோளாக எடுத்துக் காட்டி, ரஸிகமணிக்கு அழகாக வந்தனோபசாரம் கூறி, அநேக 'அப்ளாஸ்'களை அப்படியே தட்டிக் கொண்டாள்.

சில அபிமானிகள் ஸ்ரீ டி. கே. சி. யின் மீது இயற்றியிருந்த வாழ்த்துப் பாடல்களை எல்லாம் ஸ்ரீ வெங்குசாமி ஸஸம் குன்றாது அழகாகப் படித்துக் காண்பித்தார்.

இறுதியில் பலத்த கரகோஷத்திற்கிடையே எழுந்த கல்கி, தமக்கே உரிய கவர்ச்சிகரமான முறையில் விடை பெற்றுக் கொண்டார்:

"தஞ்சாவூர்க் கோயிலைக் காண்பதற்காகச் சில தமிழர்கள் சென்றனர். அக்கோயிலில் உள்ள பல அற்புதங்களில் பிரம்மாண்டமான நந்தியும் ஒன்று. அவர்களுக்குக் கோயிலைக் காண்பித்துக் கொண்டு வந்தவன், 'இந்தப் பெரிய நந்தி ஒரே கல்லில் செதுக்கப்பட்டது' என்று கூறினான். பார்த்துக்கொண்டு வந்தவர்களில் ஒருவர், 'பூ! இவ்வளவுதானா? இந்த ஊரில் கல் கிடைப்பது கஷ்டம் போலிருக்கிறது! அதனால்தான் ஒரே கல்லில் பண்ணி விட்டார்கள்!' என்று கூறிவிட்டு மேலே போனாராம்.

இப்படிப்பட்ட கலா ரசனைதான் இருபது வருஷத்துக்கு முன்பு தமிழரிடையே நிலவி வந்தது. தமிழ்க் கவிதை, தமிழ் நாட்டுச் சிற்பம், தமிழ் நாட்டுச் சங்கீதம் இவற்றிலெல்லாம் தமிழர்களுக்கு அலட்சியந்தான். 'தமிழ் நாடு எதிலும் உபயோகமற்றது' 'தமிழ் நாட்டில் ஒன்றுமே இல்லை' என்று சொல்லிப் பெருமையடைந்து வந்தார்கள். ஆனால் இன்றைக்குத் தமிழ் நாட்டில் எல்லாக் கலைகளும் புத்துயிர் பெற்றிருக்கின்றன. தமிழர்கள் தமிழையும் தமிழ்க் கலைகளையும் போற்றத் தொடங்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆச்சரியகரமான மாறுதலை உண்டாக்கியவர் யார்? நம் ரஸிகமணி அவர்கள்தான்! (கரகோஷம்) பம்பாய்த் தமிழர்களிடம் எனக்கு விசேஷ மரியாதையும் அபிமானமும் ஏற்படக் காரணம் உண்டு. எட்டயபுரம் பாரதி ஞாபகார்த்த நிதி சேகரிக்க ஆரம்பித்தபோது, பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார்தான் முதலில் அம்முயற்சியை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றினார்கள். முதலில் பணம் சேர்த்து அனுப்பியவர்களும் பம்பாய்த் தமிழர்கள்தான். (கரகோஷம்) பம்பாய் வழிகாட்டிய பிறகுதான் இலங்கையிலிருந்து லாகூர் வரை உள்ள தமிழர்கள் பாரதி நிதிக்குப் பணம் அனுப்பினார்கள்!"

கல்கியின் சிறந்த பாராட்டைப் பெற்ற சபையோர் பெருமையும் ஆனந்தமும் பொங்கக் கைதட்டி ஆரவாரித்தனர்.

6. புறப்பாடு

சென்னை எக்ஸ்பிரஸ் புறப்படுவதற்கு ஒரு மணி நேரம் இருந்தது. 'விக்டோரியா டர்மினஸ்' பிளாட்பாரத்துக்குள் நுழைவதற்காக, டிக்கெட் கிடைக்குமிடத்திற்குச் சென்று கேட்டால்; அகப்பட்டால்தானே? வந்தது வரட்டுமென்று வாயிலில் நின்று கொண்டிருந்த டிக்கெட் பரிசோதகருக்கு 'டிமிக்கி' கொடுத்து விட்டு உள்ளே சென்றேன். ஒரே இடத்தில் தமிழர்களின் நெருங்கிய கும்பல் காணப்பட்டது. கூட்டத்தின் இடையில் கஷ்டப்பட்டுப் புகுந்து இறுதியில் கல்கி அவர்கள் நின்ற இடத்தை அடைந்தேன்.

"ரஸிகமணி எங்கே?" என்று ஆவலுடன் கேட்டேன்.

"அதோ பாருங்கள்!" என்று சுட்டிக் காண்பித்தார்.

"புஷ்பமாலைக் குவியல் அல்லவா அங்கே காணப்படுகிறது?" என்றேன்.

"அந்த மாலைக் குவியலுக்கு நடுவில் பாருங்கள்" என்றார் கல்கி.

பூ மாலைகளைத் தாங்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தார் டி. கே. சி! "அடா! பம்பாய்த் தமிழர்கள் தங்கள் அன்பை இப்படியா காட்டி ரஸிகமணியின் கழுத்தைப் புண்ணாக்க வேண்டும்?" என்று நினைத்துக் கொண்டே பத்து இருபது மாலைகளை அவருடைய கழுத்திலிருந்து கழற்றி வைத்தேன்.

இதையெல்லாம் பிளாட்பாரத்தில் கூடியிருந்த இதர வட இந்தியர்கள் அளவில்லாத ஆச்சரியத்துடன் கவனித்துக்கொண்டிருந்தனர்.

"எங்கே டி. கே. சி?" என்று ஒரு அழுத்தமான குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து மாலையும் கையுமாக வந்தார் ஒருவர். டி. கே. சி. யைச் சூழ்ந்திருந்த

வர்கள் எல்லாரும் அவருக்கு அவசரமாக வழி விட்டது எனக்குச் சிறிது வியப்பை அளித்தது. வந்தவர் ரவிகமணியை நெருங்கி அவர் கழுத்தில் மாலையைச் சூட்டி மகிழ்ந்தார். "இவர்தான் நேதாஜியின் சர்க்காரில் மந்திரியாயிருந்த எஸ். ஏ. ஐயர்!" என்று யாரோ இருவர் பேசிக்கொள்வது என் காதில் விழுந்தது. அத்தகைய வீர புருஷருக்கு எல்லாரும் வழி விட்டதில் ஆச்சரியம் இல்லைதான்.

நேரம் போனதே தெரியாமல் ரவிகமணியின் சம்பாஷணையில் மயங்கியிருந்தவர்கள் பிளாட்பாரத்தில் திடீரென்று மணியடிக்கும் ஓசை கேட்ட பிறகுதான் சுயநினைவு அடைந்தார்கள். வண்டி நகர்ந்தது. 'கடிதம் போடுங்கள்' 'அடிக்கடி வந்து போய்க் கொண்டிருங்கள்' 'கம்ப ராமாயணத்தைப் பற்றி நிறைய எழுதுங்கள்' என்பன போன்ற பல வேண்டுகோளைப் பொழிந்து கொண்டிருந்த எங்களைத் தாண்டிப் பெட்டி பெட்டியாக ரயில் மெல்ல நழுவிச் சென்றது. அதே சமயம் என் கண் முன்னே ஒரு கம்ப ராமாயணக் காட்சி தோன்றியது. குகனுடைய படகில் ஏறிக் கொண்டு ராமன் கங்கையைக் கடந்து சென்றபோது, கரையில் குழுமியிருந்தவர்கள் முகம் வாடிக் கற்சிலைகளாய்ச் சமைந்திருந்தார்களல்லவா? அந்தத் தோற்றமே அது! நிஜமாகவே டி. கே. சி. அவர்களின் பிரிவினால் பம்பாய் ரசிகர்கள் அனைவரும் 'எரியுறு மெழுகாகி' விட்டார்கள்.

எல்லாரையும்போல் நானும் இளகிய மனதுடன் தள்ளாடிக் கொண்டே வெளியே வந்தேன். மீண்டும் யாரோ ஒரு குள்ளமான நபர் ஒருவர் 'டணார்' என்று என்மேல் மோதிக்கொண்டு, அதைப் பொருட்படுத்தாமல் ஓடப் பார்த்தார். கோபத்துடன் நான் நிமிர்ந்து பார்த்தேன். என்ன அதிசயம்? இந்தத் தடவையும் என்மேல் மோதியவர் பம்பாய்த் தமிழ்ச் சங்கக் காரியதரிசி ஸ்ரீ கந்தசாமி அவர்களேதான்!

"இன்னும் என்னய்யா அவசரம்? கம்பர்தான் போய்விட்டாரே!" என்றேன்.

"இப்போது போனால் என்ன, ஸார்? அடுத்த கம்பர் விழாவுக்கு அவரை வரவழைக்க ஏற்பாடு செய்ய வேண்டாமா?" என்று சொல்லிக் கொண்டே ஸ்ரீ கந்தசாமி அவசரமாக மேலே நடந்தார்.

"அவருடைய மனோரதம் நிறைவேறட்டும்" என்று வாழ்த்திக் கொண்டே நானும் நடையைக் கட்டினேன்.

பம்பாயில் கம்பர்!

★

கம்பரும் வந்தார்;
கவிமழை பெய்தது!
பம்பாய் நகரமும்
பரவச முற்றது!

இன்பமே பொங்கிட
இயலிசை அளித்து
துன்பம் தவிர்த்தனர்
தூய தவத்தினர்!

நாளொரு கூட்டமும்
நல்விருந் தாகவே
மாதரும் மக்களும்
மகிழ்ந்து உவந்தனர்!

கவிமணம் கமழ்ந்தது
கன்மனம் கரைந்தது
புவியெலாம் பூரித்து
புத்தொளி வீசிற்று!

—அ. சுவாமிநாதன்.


ஓர் அழகிய நங்கை
ஸரளாவைப் பற்றி
அவள் தந்தைக்கு
அபாரமான பெருமை
"இம் மாதிரி என் ஸரளா என்ன எழிலுடன் விளங்குகிறாள்!"
பாண்ட்ஸ்
க்ரீம்ஸ்
வியாபார விவரங்களுக்கு இவ்விலாசத்திற்கு எழுதவும்: எல். டி. ஜெய்மூர்
& கோ., (இந்தியா) லிட்., பம்பாய் - கல்கத்தா - கராச்சி - சென்னை.
Copyright: Ponds Extract Co.

பகையாளி மகன்

கி. ரா. கோபாலன்

இடையில் தண்ணீர்க் குடத்தைத் தாங்கியபடியே தயங்கித் தயங்கி நடந்து வந்தாள் செல்வி. ராக்கப்பனின் தோட்டத்தை நெருங்கியதும் சட்டென்று நின்று நான்கு பக்கமும் திரும்பிப் பார்த்தாள். மனதில் கொஞ்சம் அசட்டுத் தைரியம்! ஆனால் உள்ளூறப் பயம். சமீபத்தில் மனிதர்கள் வாடையேயில்லை.

தோட்டத்து வேலிப் படல் அவ்வளவு பந்தோபஸ்தாகக் கட்டப்பட்டிருக்கவில்லை. படலை அவிழ்த்துக் கொண்டு அடி மேல் அடி வைத்துத் தோட்டத்துக்குள் நுழைந்தாள் செல்வி.

அந்தத் தோட்டம் ராக்கப்பனின் குத்தகை. ராக்கப்பன் செல்வியின் தகப்பனுக்கு ஜன்ம வைரி. அந்தத் தோட்டத்தின் காவற்பழத்தின் வாசனையை முகருவதுகூட அவளுக்குப் பாவம். என்ன செய்வது? ஆசை கேட்கவில்லையே!

தரையில் அங்கு மிங்குமாகச் சிதறிக் கிடந்த காவற்பழங்களைப் பொறுக்கலானாள். கை நிறைந்து விட்டது; மனது மாத்திரம் நிறையவில்லை!

யாரோ தோட்டத்துக்குள் வரும் காலடி ஓசை! செல்வி திடுக்கிட்டு எழுந்து நின்று மிரள மிரள விழித்தாள். "யாரடா அது தோட்டத்திலே!" என்று ஒரு குரல் அதிகாரத் தோரணையில் கேட்டது. அந்தக் குரல் யாருடையது? அவளுக்கு நன்றாகத் தெரியும்; 'வேலய்யன்' என்று சொல்லி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.



அவளும் வந்துவிட்டாள். அவன் காவல் மாந்தடியில் செல்லியைக் கண்டதும் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்து நின்று விட்டான்.

அவள் வெட்கித் தலை குனிந்து நின்றாள். அவளால் அவனுக்கு என்ன பதில் சொல்ல முடியும்? பயத்தினால் ஏற்பட்ட அவளுடைய உள்ளத் துடிப்பு அடங்கவில்லை. நெற்றியில் முத்து முத்தாக வியர்வை அரும்ப, மிரள மிரள விழித்துக்கொண்டு நின்றாள். அவமானமும் பயமும் அவள் உள்ளத்தை உலுக்கின. வேலய்யன் அவளுடைய அச்சத்தையும் தடுமாற்றத்தையும் நன்குணர்ந்து கொண்டான். அவளை நெருங்கிப் பரிகாசமாக, "இந்தா செல்லி! எங்கிட்ட மாத்திரம் காவப் பனம் வேணும்னு ஒரே ஒரு வார்த்தை சொல்லி யிருந்தாப் போதாதா! உனக்குக் கூடை கூடையா நான் கொண்டு வந்து தருவேனே! இதுக்காகப் படலைப் பிரிச்சுக்கிட்டுத் தோட்டத்துக்குள் வந்து திருடணுமா?" என்றான்.

அவள் செய்தது குற்றந்தான்; ஆனால் அவனுடைய வார்த்தைகளை அவ்வளவு பொறுமையுடன் அவளால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. வெட்கமும், அவமானமும் ஒருபுற மிருந்தாலும் கோபமும் ரோசமும் எங்கிருந்தோ பீறிட்டுக் கொண்டு கிளம்பியது. கையிலிருந்த காவற் பழங்களைத் தரையில் வீசி எறிந்து விட்டு, "பூ! பிரமாத காவப்பனம்! இதுக்காக இளைச்சபடி யெல்லாம் பேசிப்பிடாதே! எங்க சாலை மாமரத்திலே நீங்களெல்லாம் மாங்கா அடிச்சுத் தின்கிறது காணாமா இது?" என்று கோபமாக வார்த்தைகளை உதிர்த்து விட்டு அந்த விறைப்புத் தளராமலேயே வெளியே போக யத்தனித்தாள்.

வேலய்யன் அவளெதிரில் சென்று கையை நீட்டி வழியை மறித்து, "அடடே! எப்பா! என்ன கோவம்! என்ன கோவம்! ஹூம்! காவப் பனம் திருடினது மில்லாமே கோவம் வேறே வருதே!" என்றான். இப்பொழுது அவனுடைய வார்த்தையில் அன்பான — விளையாட்டான கேலிதான் தொனித்தது. அவனுடைய ஆர்வம் மிகுந்த பார்வை ஒரு விநாடியில் அவன் உள்ளத்திற் கொண்ட எண்ணத்தைச் செல்லிக்குப் புலனாக்கியது. அவளுடைய கோபமும் ஆத்திரமும் எங்கோ பறந்தன. ஒரு பெரிய சமுத்திரத்தையே கடந்தவள் போல் பெருமூச்சு விட்டாள். அடங்கிய குரலில் தடுமாற்றத்துடன் பேச ஆரம்பித்தாள்:

"வழி விடு! நான் போகணும்!"

வேலய்யன் அவள் முகத்தைப் பார்த்த படியே, "என்னைப் பார்த்ததும் நீ ரொம்பப் பயந்துட்டே! இல்லையா, செல்லி!" என்று பச்சாத்தாபத்துடன் கேட்டான்.

"கையும் களவுமா பிடிபட்டா பயமில்லாமே இருக்குமா? அதுவும் பகையாளிங்க தோட்டத்திலே வந்து திருடி......"

"செல்லி, யாரு பகையாளி? உங்கப்பாரும் எங்கப்பாருந்தான்! நானும் நீயும் இல்லே......"

"நான் ஒன்றும் விரோதம் பாராட்டல்லே! ஆனா ஊர்லே நம்ம ரெண்டு குடும்பத்தையும் பகையாளிங்கன்னு தானே சொல்றாங்க!"

"இதோ பாரு, செல்லி! இந்த விரோதம் போட்டி யெல்லாம் எனக்குப் பிடிக்கவே யில்லே. நீயும் நானும் புருசன் பெண்சாதி ஆயிட்டா, இந்தச் சண்டை சச்சரவுக் கெல்லாம் வழியில்லே பாரு......!"

அவளுக்கும் அவனை விவாகம் செய்து கொள்வதில் ஆசைதான். ஆனால் அது அவ்வளவு எளிதாக முடியக் கூடியதா? பகையாளி மகளல்லவா அவள்? அவள் தடுமாற்றத்துடன் தயங்கித் தலை குனிந்து நின்றாள். வேலய்யன் அவள் தோள்மீது ஒரு கையை வைத்து மறு கையால் அவள் தாவங் கட்டையை உயர்த்தி, "என்ன செல்லி! உனக்கும் என்னைக் கட்டிக்கிறத்திலே இஷ்டந்தான்னு எனக்கு நல்லாத் தெரியும். ஆனா உங்கப்பாரு பகையாளி வீட்டிலே உறவாடுவாரான்னுதானே யோசிக்கிறே?"


"ஆமா, அதிலே என்ன சந்தேகம்? நாம இப்படிப் பேசிக்கிட்டு நிக்கிறதைக் கண்டாலே போதாதா? ஊர்லே இருக்கிறவங்க குலையுவாங்களே, அப்புறம் உங்கப்பாரும் எங்கப்பாரும் கத்தியும் அரிவாளும் தூக்கிக் கிட்டுக் கிளம்பிடுவாங்க......"

"ஹூம் ... பிரமாதக் கத்தி—அரிவா, இதுக்குப் பயப்பட்டு முடியுமா? இதோ பாரு, உனக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதிலே இஷ்டந்தானே? அதை முதல்லே சொல்லு, அப்புறம் எல்லாத்தையும் நான் ஒரு வழிக்குக் கொண்டாரேன், பாரு!"

"வாயைத் திறந்து சொல்லணுமாங்காட்டியும்......சரி! வழிவிடு, நான் போகணும்."

★

*JT*க்கப்பனும் சுப்பய்யனும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களில்லை. ஊரில் இருவரும் சமமான அந்தஸ்துள்ளவர்கள்.



எந்த விஷயமாயினும் ஒருவருக்கொருவர் போட்டி, தீராப் பகை, ஓயாச் சண்டை, ஒருவரை மிஞ்சி ஒருவர் நிற்பதிலேயே சதா கவனம். இதனால் ஊரிலும் இரண்டு கட்சி. இரண்டு குடும்பங்களுக்கும் தலைமுறை-தத்துவமாக உள்ள பிதுரார்ஜிதச் சொத்துக்களுடன் சேர்ந்து வளர்ந்து வந்ததுதான் இந்தப் பகை உணர்ச்சியும் என்று சொல்லி விடலாம் சுலபமாக. குடும்பத் தலைவர்களிடம் நாளுக்கு நாள் இந்தக் குரோதம் வளர்ந்து வந்தபொழுது, மறு பக்கத்தில் இரண்டு இளம் உள்ளங்களினிடையே அன்பும் ஆர்வமும் அந்தரங்கமாக வளர்ந்து வந்தன.

பயிரிடும் நாள் — அறுவடை காலம். எப்பொழுதும்போல நாட்கள் ஓடிக்கொண்டுதான் இருந்தன. ஊரில் ராக்கப்பனின் கை கொஞ்சம் கொஞ்சமாக ஓய்வடைந்து கொண்டு வந்தது. இதற்குக் காரணம் ராக்கப்பன் நோயாளியாகிப் படுத்த படுக்கையாகக் கிடந்ததுதான். அவனுடைய மகன் வேலய்யனுக்குப் போட்டியிலும் சண்டையிலும் அவ்வளவாக ஆர்வமில்லை. ஊரில் எல்லோரும் அவனை 'பயந்தாங்கொள்ளி' 'அசட்டுப் பிள்ளை' என்று பலவிதமாகக்கூடச் சொல்லத் தலைப்பட்டனர். இவைகளையெல்லாம் வேலய்யன் காதில் வாங்குவதேயில்லை. அவன் யாரிடமும் கோபமோ, வருத்தமோ கொள்ளுவதும் கிடையாது.

ஒரு நாள் இரவு. மணி ஒன்பதுக்குமேல் இருக்கும். ராக்கப்பன் படுக்கையிலிருந்தபடியே வேலய்யனைக் கூப்பிட்டு, "வேலு, கொஞ்சம் சப்பய்யனைப் போய்க் கூப்பிட்டுக்கிட்டு வாயேன்!" என்றான்.

வேலய்யன் இதைக் கேட்டதும் தன் தகப்பனாரை ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டு நின்றான். "ஹூம்!... உனக்கு மலைப்பாய்த்தான் இருக்கும் வேலு! இந்த மூச்சு எப்போ போகப் போவுதோ? எனக்கு நம்பிக்கையில்லை, மறுபடியும் மனுசனா எழுந்திருப்பேன்னு! போகும்போது கூடவா பகையும் சண்டையும்? போ, கூட்டிக்கிட்டு வா!"

வேலய்யன் ஒன்றும் பதில் பேசவில்லை. மௌனமாகச் சப்பய்யனின் வீட்டை

நோக்கி நடந்தான். அன்றிரவு நெடுநேரம் வரையில் ராக்கப்பனும் சுப்பய்யனும் பேசிக் கொண்டிருந்தனர். வெளியே வாசல் திண்ணையில் ஜன்னலுக் கருகே உட்கார்ந்து அவர்களுடைய சம்பாஷணையைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான் வேலய்யன்.

ராக்கப்பன் சுப்பய்யனின் கைகளைப் பிடித்துக்கொண்டு கண் கலங்க துக்கத்தோடு சொல்லிக்கொண்டு போனான்: "சுப்பய்யா, நானும் நீயும் இந்தப் பூமியிலே பிறந்ததிலே யிருந்து பகையாளிங்கதான். என்னமோ அப்படியே காலமும் ஓடிப் போச்சு. உனக்கும் எனக்கும் இருக்கிற பகை என் மூச்சோடு தீர்ந்து போகட்டும். வேலய்யன் கண்ணுக்குக் கண்ணு எனக்கு ஒரே பிள்ளை. என்னைப்போல அவன் உங்கிட்ட விரோதம் பாராட்டிக்க மாட்டான். ஆனால் நீ அவனை என் மகனாச்சேன்னு ஒண்ணும் பாராட்டிக்காதே! அவன் என் மாதிரி உனக்கு ஈடில்லே. ஒண்ணும் தெரியாத புள்ளே......!"

சுப்பய்யன் எல்லாவற்றையும் மௌனத்தோடு கேட்டுக் கொண்டிருந்துவிட்டு அனுதாபம் பொங்கும் குரலில், "அண்ணே! கவலைப்படாதீங்க. எனக்கு நீங்க சொல்லித் தரணுமா? புலியும் சரி, பூனையும் சரியா! வேலய்யன் தேத்துப் புள்ளே! எல்லாம் எனக்குத் தெரியும். நான் போயிட்டு வரேன். எதுனாச்சும் அவசரமா இருந்தா எனக்கு ஆளனுப்புங்க!" என்று சொல்லி விட்டு வெளியே வந்தான். வேலய்யனைக் கூப்பிட்டு, "தம்பி! அப்பாரைப் பார்த்துக்க, நான் வீட்டுக்குப் போய் வரேன். அந்த வம்பு தும்பெல்லாம் அவரு தலையோட மறையட்டும். சாயங்காலம் கண்ணு வைத்தியரைக் கூடக் கேட்டேன். கொஞ்சம் இளுத்தாப் பிலேதான் சொன்னாரு! இனிமேல் நல்லது கெட்டதுக்கு 'மாமா'ன்னு என்னை வந்து கேளு. ஊரான் பேச்சை யெல்லாம் கேட்டுக்கிட்டுத் தாறு மாறு ஏதாவது செய்து வைக்காதே!" என்று நெடு நேரம் வேலய்யனுக்கு உபதேசம் செய்து விட்டு விடை பெற்றுக் கொண்டு போனான் சுப்பய்யன். கண்ணு வைத்தியர் சந்தேகித்தபடி மறுநாளே ராக்கப்பனின் மூச்சு அடங்கிவிட்டது.



★

ஆடி மாதம். தோட்டத்தில் முத லீடாக நாவற்பழங்கள் கனிந்து உதிர்ந்தன. ஒரு படி நாவற்பழ மிருக்கலாம். நல்லதாகப் பார்த்துப் பொறுக்கி ஒரு வாழைப் பட்டையில் கட்டி எடுத்துக்கொண்டு சுப்பய்யனின் வீட்டை நோக்கி நடந்தான் வேலய்யன். ஆற்றங்கரைத் தோட்டத்து நாவற்பழ மென்றால் செல்லிக்கு உயிரல்லவா? அவன் மனத்தில் துடிப்பும் ஆவலும் மிஞ்ச அதி வேகமாய் நடந்தான்.

வீட்டில் ஒருவருமில்லை; செல்லி வீட்டுக் கொல்லைப்புறத்தில் செடி கொடிகளுக்கு நீர் இறைத்துக் கொண்டிருந்தாள். வேலய்யன் வீடெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டுக் கொல்லைப்புறம் வந்தான். செல்லி அவனைக் கண்டதும் ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்து, "என்ன அத்தான், வாங்க!" என்றாள். ஆனால் அவனையும் அறியாமல் வெட்கமும் நாணமும் வந்து சூழ்ந்து கொண்டன. வேறெங்கேயோ முகத்தைத் திருப்பிக்கொண்டு பக்கத்திலிருந்த செடியி லிருந்த ஒரு இலையைக் கிள்ளினாள்.

"வீட்டிலே ஒருத்தரும் இல்லையா?" என்று கேட்டான் வேலய்யன்.

"அம்மா ஆத்துக்குப் போயிருக்குது; அப்பா வய வெளி பார்க்கப்போயிருக்குது!" என்று சொன்னாள் செல்லி.

வேலய்யன் எத்தனை நாட்களாய் இப்படிப் பட்ட சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்! செல்லியோடு தனிமையில் மனம் விட்டுப் பேசி எவ்வளவு நாட்களாகி விட்டன! நான்கு புறமும் பார்த்துக் கொண்டே அவள் கன்னத்தில் மெதுவாகத் தட்டி, "செல்லி!" என்றான் ஆர்வத்தோடு. அவளுடைய முகத்தில் ஒரு புன்முறுவல். அந்த வசீகரமான பார்வையில் — நாணமிருந்த அந்த அழகிய கண்ணொளியில் சொக்கி நின்றான் வேலய்யன்.

பிறகு அவ்வளவு நேரம் மறைத்து வைத்திருந்த வாழைப் பட்டைப் பொட்டணத்தைச் செல்லியிடம் கொடுத்தான். "இதென்ன, சொல்லு!" என்று பரிகாசமாக சுகைத்து விட்டு, அந்தப் பொட்டணத்தைக் கையில் வாங்கிக் கொண்டு, "என்ன இருந்தாலும் திருடித் தின்கிற சாவப்பழத்து ருசி ஆகாது, அத்தான்!" என்றாள் செல்லி, கேலியாகச் சிரித்துக் கொண்டே. அவன் மெதுவாக அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு "ஏன், செல்லி! உங்கப்பாரைக் கேட்டியா? என்ன சொன்னாரு?" என்றான் வெகு ஆர்வத்துடன்.

அவன் வார்த்தையை முடிக்கவில்லை.

"ஹா!" என்று பயத்துடன் அலறிக் கொண்டே அவனிடமிருந்து தன் கையை விடுவித்துக் கொண்டாள் செல்லி. வேலய்யன் என்னவென்று திரும்பிப் பார்க்கக் கூட நேரமில்லை. "மரியாதை கெட்ட கழுதை!" என்ற குரல் தான் அவன் காதில் விழுந்தது. அவன் விலாவில் ஒரு அடி! அதே கை அவன் பிடரியைக் கவ்விப் பிடித்து கெட்டித் தள்ளியது. கண்களில் தீப்பொறி பறக்க, மீசை துடிதுடிக்கச் சுப்பய்யன் நின்று கொண்டிருந்தான். "மரியாதை கெட்ட நாயே! வெளியே போடா, படுபாவி! எத்தனை நாளாடா இப்படி என் குடியைக் கெடுக்கத் திட்டமிட்டிருக்கே? அப்பனைப் போலத்தானே மகனும்...?"

வேலய்யன் அவனுக்குச் சமாதானமாக ஏதோ சொல்ல நினைத்தான். "மாமா......!" என்று அவன் ஏதோ பேச ஆரம்பித்தது, சுப்பய்யனின் கோபத்தை இன்னும் அதிகமாகத் தூண்டிவிட்டது. "மாமா...... யாருடா மாமா! இப்படி உறமுறை கொண்டாடித்தான் என் குடியைக் கெடுக்க நினைச்சயோ? எனக்கு வர ஆத்திரத்திலே இன்னிக்கு உன் உயிரு தப்பணும்னு இப்பவே இந்த இடத்தை விட்டு ஓடிடு. இல்லாட்டி......"

நடுநடுங்கிக் கொண்டு நின்ற செல்லி துக்கமும் அழுகையும் பொங்கும் குரலில், "அப்பா!" என்றாள். சுப்பய்யன் அனல் பறக்கும் தன் சிவந்த கண்களால் அவளைப் பார்த்தான். மறு விநாடி 'பளிச்' சென்று அவள் கன்னத்தில் ஒரு அடி விழுந்தது.

வேலய்யனின் பொறுமை என்னவோ இந்த இடத்தில் மீறிவிட்டது. "இனிமே ஊர்லே பார்த்துக்க, உன் பகையாளி மகன் வேலய்யனை! இதோ பார், இப்போ சொல்லற வார்த்தை—இந்த ஊர்லே உன் மகன் செல்லியை என்னையறியாமல் எந்தப் பருந்தும் கொத்திக்கிட்டுப் போயிட முடியாது. அப்படி எவனாவது அவளைத் தாலி கட்டணும்னு நினைச்சான்......தட்டுத் தவறி அவ பேரைச் சொன்னாக்கூடப் போதும். அவன் உயிரு அவன்கிட்ட இல்லை. கொலை மேலே கொலைதான் நடக்கும். பார்த்துக்குவோம். நான் பகையாளியா இருந்தே காரியத்தை நடத்திக்கிறேன்!" என்று படபடப் போடு சொல்லிவிட்டு அந்த வீட்டை விட்டு வெளியேறினான்.

சுப்பய்யன் "ஹும், அப்படியா!" என்று அவனைப் பார்த்தபடியே நின்றான்.

துணி ரேஷன் விசித்திரம்!



"என்ன ஸார், இது! குடுகுடுப்பாண்டி மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு வந்திருக்கிறீர்கள்!"

"கைக் குட்டைக்கு ரேஷன் கிடையாதல்லவா? அதனாலே கைக் குட்டையாகவே வாங்கி சட்டை தயார் பண்ணி விட்டேன். அதிருக்கட்டும்; இதென்ன, நீர் உடம்பெல்லாம் ஒரே கட்டுப் போட்டுக் கொண்டு வந்திருக்கிறீரே? ஏதாவது அடிகிடி பட்டதா என்ன?"

"அதெல்லாமில்லை; 'பாண்டேஜ்' துணிக்கு ரேஷன் கிடையாதேன்றோ? அதனாலே துணிப் பஞ்சத்தைச் சமாளிக்க இப்படிப் புது மாதிரி டிரஸ் தயார் பண்ணி விட்டேன்!"

ஊரில் மறைந்தொழிந்த பகைமையும் குரோதமும் மீண்டும் புத்துயிர் கொண்டன. மறுபடியும் இரண்டு கட்சி. சதா ஒவ்வொரு விஷயத்திலும் போட்டி, சண்டை, சச்சரவு. சுப்பய்யனால் வேலய்யனோடு போட்டியிட்டுச் சமாளிக்க முடியவில்லை. வேலய்யன் எப்படியோ ஊரின் மதிப்புக்குப் பாத்திரமாகி விட்டான். சுப்பய்யனின் மதிப்பும் அதிகாரமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குலைந்து கொண்டு வந்தன. இதனால் அவனுடைய விரோத உணர்ச்சி மட்டும் அழியவில்லை; அதிகமாகிக் கொண்டுதான் வந்தது.

வருஷம் ஒன்றாகிவிட்டது. கிராமத்தில் ஏற்பட்ட இந்தப் பிளவை மனிதர்களால் சீர் செய்ய முடியவில்லை. கடைசியில், தெய்வம்தான் கண்ணைத் திறந்தது. கருணையோடு அல்ல — அடங்காத கோபத்தோடு! ஊருக்கே பெருத்த சோதனை. என்றும் கண்டிராதபடி வைசூரி. மாரியாத்தாளின் கோரத் தாண்டவம். நல்லவர், கெட்டவர், ஏழை, பணக்காரர் எல்லோருடைய வீடுகளிலும் மழைக்கும், மாரிக்கும் ஏதாவது வித்தியாச முண்டா? இரண்டே மாதங்கள் தான் இந்த ஆட்டம். கிராமத்தின் ஜன சங்கியையில் கிட்டத்தட்ட பாதிக்குமேல் குறைந்துவிட்டது.

வேலய்யனின் தாயார் இறந்துவிட்டாள். அதைவிடப் பரிதாபம், சுப்பய்யனின் மனைவி இறந்ததும்—அவன் மகள் செல்லி வைசூரியினால் அழகு குலைந்ததுந்தான். செல்லியின் அழகிய கண்கள் ஒளியை இழந்து விட்டன. வண்டுபோல் சுழலும் இரு விழிகளும் அம்மைத் தழும்பேறிக் கலங்கி அழகை இழந்து நின்றன. சுப்பய்யன் இந்தச் சோதனை தாங்காமல் மனமடிந்து படுத்த படுக்கையாகி விட்டான். இவைகளெல்லாம் வேலய்யனுக்குத் தெரியாமல் இல்லை; அவனும் இதைக் கேட்டதும் மனமிடிந்து பித்துக் கொண்டவன்போல் ஆகி விட்டான். சதா செல்லியைப் பற்றிய விசாரமே அவன் மனதைப் பிய்த்தெடுத்துக் கொண்டிருந்தது. அவளைப் போய்ப் பார்க்க வேண்டுமென்ற ஆசை தோன்றும். ஆனால், மனதில் ஒருவிதமான பயமும் சங்கடமும் ஏற்படும். கண்ணிழந்த செல்லியின் அழகு எப்படிக் குலைந்திருக்குமென்பதை அவன் எண்ணும்போது அவனது உள்ளம் நடுங்கும், உடல் சிலிர்க்கும்.

தோட்டத்து நாவல் மரத்தடியில் உட்கார்ந்து ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான் வேலய்யன். அவசர அவசரமாகத் தரையில் உதிர்ந்திருந்த நாவற் பழங்களைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு செல்லியின் வீட்டை அடைந்தான்.

வாசற்படியில் நின்றுகொண்டு மெதுவாக உள்ளே எட்டிப் பார்த்தான் வேலய்யன். சங்கோசமும் படபடப்பும் ஒருபுறம் அவனை உலுக்கிக் கொண்டிருந்தன. வீட்டுக் கூடத்தில் கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்திருந்த சுப்பய்யனின் கண்கள் வேலய்யனைப் பார்த்துவிட்டன. அவன் ஆச்சரியமும் ஆனந்தமும் மீற, "வா, தம்பி! வா! வரலாம் வா! நீ கட்டாயம் ஒரு நாளைக்கு வருவேன்னு எனக்குத் தெரியும். தினம் உன்னைப் பத்தி நான் எண்ணாமல் இருக்கிறதில்லே! வா! வந்து உட்காரு ......!" என்றான். கட்டிலுக்குப் பின் பக்கம் உட்கார்ந்து இருளுலகில் எதையோ பார்த்துக்கொண்டிருந்த செல்லி ஆர்வத்தோடு துடிதுடித்துக் கொண்டே, "யாரப்பா, அது?" என்றாள்.

"யாரு? நம்ம வேலய்யன்!"

வேலய்யன் கட்டிலுக்குச் சமீபமாக வந்து நின்றான். அவனுடைய பார்வையெல்லாம் செல்லியின் மீதே லயித்திருந்தது.

செல்லி தலை குனிந்தபடியே உட்கார்ந்திருந்தாள். அவள் மனது ஏதோ ஒரு பெரிய போராட்டத்துக்கு இலக்காகி இருந்தது. அப்பொழுது, அவளுடைய சூன்யமான கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகப் பெருகிக் கன்னங்களில் வழிந்தோடியது. வேலய்யன் அவளுக்குச் சமீபமாகச் சென்று, "செல்லி!" என்றான். அதில் இரக்கமும், பாசமும் தழுவிக்கொண்டு நின்றன. அவள், "அத்தான்!" என்றாள். அதற்குமேல் வார்த்தை வெளி வரவில்லை. அழுகைதான் பீறிட்டுக்கொண்டு வந்தது.

சுப்பய்யன், "தம்பி, செல்லி ஒரு பாவமும் அறியாத பொண்ணு! கண்ணு கெட்டுப் போன இந்தப் பொண்ணை எவன் கட்டிக்கப் போறான்? ஆயிரமானாலும் குருட்டுப் பொண்ணை எவனாவது கட்டுவானா? வீரப்பன் சொன்னான்: மாத்தூரு கிட்ட ஒரு பையன் இருக்கானாம். அவனுக்கும் இரண்டு கண்ணும் தெரியாதாம்......"

அவ்வளவு நேரம் பொறுமையுடன் இருந்த வேலய்யன் துள்ளிக் குதித்தான். "என்ன சொன்னீங்க! உங்க மனசிலே பகை

உணர்ச்சி போகல்லையே! இதோ பாருங்க, இந்த வேலய்யன் அன்னிக்கி சொன்ன வார்த்தைதான். நான் இருக்கிற வரையில் செல்லியை ஒரு பய துணிஞ்சு கல்லாணம் பண்ணிக்கப் போறேன்னு சொல்ல முடியாது. இந்த உலகம் புரண்டு நின்னாலும் சரி; செல்லியை நான்தான் கல்லாணம் பண்ணிப்பேன்!" என்றான்.

செல்லி தலை நிமிர்ந்து பார்த்தாள். பாவம், அவளுக்குத்தான் இந்த உலகமே இருண்டிருக்கிறதே, எப்படி அவள் வேலய்யனின் ஆசை முகத்தைப் பார்க்க முடியும்?

கப்பாய்யன் இதை எதிர் பார்க்கவேயில்லை. ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்து உட்கார்ந்து விட்டான். அவன் உள்ளத்தில் ஏற்பட்ட ஆனந்தம் அவனைப் பித்தாக்கி விடும்போல் இருந்தது. "வேலு! அப்படின்னு நீதான் செல்லியைக் கட்டிக்கப் போறயா? இதோ பாரு! இனிமேல் நான் உன் எதிராளி யில்லே. உன்னோடே போட்டியிட எனக்கு ஜீவனில்லே. இப்பவே வேணுமானாலும் தாலியைக் கட்டிப்பிடு!......அதிருக்கட்டும்; மேல் துண்டுலே என்ன முடிச்சு?— கனிஞ்சு கரையாருதே! நாவப்பழமா?"


வேலய்யனுக்கு அப்பொழுதுதான் நினைவு வந்தது. "அடடே! மறந்தே போயிட்டேனே! செல்லிக்கு எங்க தோட்டத்து நாவப்பழமுன்னா உயிரில்லே, அதுக்காகக் கொஞ்சம் பொறுக்கி எடுத்துத் துண்டுலே முடி போட்டுக்கிட்டு வந்தேன்!" என்று சொல்லிக் கொண்டே முடிச்சை அவிழ்த்தான்.

"ஐயோ! அசட்டுப் புள்ளே! நாவப் பழத்தை எவனாவது மேல் துண்டுலே முடிஞ்சுக்கிட்டு வருவானா? துண்டெல்லாம் கறையாகிப் போயிடுமே!"

வேலய்யனுக்குச் செல்லியை விட இந்த உலகத்தில் உயர்ந்தது எது?

"மேல் துண்டுதானே! போனாப் போவுது! இந்தா செல்லி, நாவப்பளம்!" என்று சொல்லிக் கொண்டே அவளை நெருங்கினான் வேலய்யன்.

அதைப் பெற்றுக் கொள்வதற்காக அவள் இரண்டு கைகளையும் நீட்டினாள். அவள் அதரத்தில் ஒரு குறு நகை; அவளது சூன்யமான நீண்ட விழிகளின் இமையோரத்தில் இரு துளிக் கண்ணீர்! இதுவரையில் அவளுக்கு உள்ளம், உலகம் இரண்டும் இருண்டிருந்தன. இப்பொழுதோ உலகம் தான் அவளுக்கு இருண்டிருக்கிறது. உள்ளம் ஒளி பெற்று விட்டது!



மந்திரப் பிரம்பு

விஜயம்

"ராஜு! இன்னும் நீ தூங்கவில்லையா?" என்று கேட்டாள் தாயார்.

"இல்லை, அம்மா! எனக்குத் தூக்கம் வரவில்லை, நீ ஏதாவது கதை சொல்லேன். கேட்டுக்கொண்டே தூங்கி விடுகிறேன்!" என்றான்.

"சரி! சொல்லுகிறேன். ஓர் ஊரிலே ஒரு ராஜா இருந்தான். அவனுக்குத் தன் ராஜ்யத்தில் புத்திசாலியான ஒரு மந்திரியை நியமிக்க வேண்டும் என்று ஆசையாயிருந்தது......!"

"அம்மா, இந்தக் கதை வேண்டாம்! ராஜகுமாரி, ராஜகுமாரன் இவர்கள் எல்லாம் வரும்படியாக ஒரு கதை சொல்லு!" என்று கூறினான் ராஜு.

"சரி, அப்படியானால் வேறு கதை சொல்லுகிறேன், கேள்!" என்று சொல்லி விட்டு அம்மா கதை சொல்ல ஆரம்பித்தாள்:—

"எத்தனையோ வருஷங்களுக்கு முன்னால் ஓர் ஊரிலே இருந்த ஜனங்களெல்லாம் ரொம்ப ரொம்பக் குட்டையாக இருந்தார்கள். சின்னக் காலும் சின்னக் கையுமாக அவர்கள் நடமாடும்போது பார்த்தால், ஏதோ பொம்மைகள் உயிர் பெற்று விளையாடுவதுபோலத் தோன்றும். அந்தச் சின்ன மனிதர்களுக்குத் தகுந்தாற்போல் அந்த ஊரில் வீடுகளும் சின்னச் சின்னதாகவே இருந்தன! அந்த ஊருக்குப் போக வேண்டுமானால் கப்பலில் ஏறிக் கடலைத் தாண்டினால்தான் போக முடியும்!" என்று அம்மா கூறிக்கொண்டே வரும்போது ராஜுவுக்கு ஒரு சிறு சந்தேகம் தோன்றியது.

"ஏன், அம்மா! அந்தச் சின்ன மனிதர்களுக்குத் தகுந்தாற்போல் சமுத்திரமும் சின்னதாயிருந்ததோ? இல்லை, இப்பொழுது நாம் பார்க்கிற மாதிரியே பெரிய சமுத்திரமாயிருந்ததோ?"

"சமுத்திரம் பெரிதாகத்தான் இருந்தது. அந்தச் சின்ன மனிதர்கள் ஏறிக்கொண்டு போன கப்பல்கள்தான் சின்னதாக இருந்தன! சரி, மேலே கதையைக் கேளு.

"அந்த ஊரில் ஒரு ராஜா இருந்தான். அவனும் சின்னவனாகத்தான் இருந்தான். அந்த ராஜாவுக்கு ஒரு அழகான பெண் இருந்தாள். அந்தப் பெண்ணும் சின்னவளாகத்தான் இருந்தாள்.

"அந்த ராஜாவுக்கு, ராஜகுமாரியையும் அவளது பிரமாதமான அழகையும் பற்றி நினைக்கும்போதெல்லாம் சந்தோஷத்துக்குப் பதிலாகத் துக்கம்தான் அதிகமாக உண்டாகும். 'நம் குமாரிக்குத் தக்க ராஜகுமாரன் கிடைக்க வேண்டுமே!' என்று அவன் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான்.

"அந்தத் தேசத்து இளைஞர்களில் யாருமே ராஜகுமாரிக்கு இணையான அழகுள்ளவனாக இல்லை. வேறு தேசத்து ராஜகுமாரனைப் பார்க்கலாம் என்றால் அதிலேயும் ஒரு பெரிய சிரமம் இருந்தது. சின்ன நப்பர் பொம்மையைப் போல் இருந்த ராஜகுமாரியின் உயரத்துக்குத் தக்க ராஜகுமாரன் கிடைக்க வேண்டுமே!

"ஒரு நாள் ராஜ சபைக்கு ஒரு முனிவர் வந்திருந்தார். அரசன் அவருக்குச் செய்த உபசாரணையில் சந்தோஷமடைந்த அவர் அரசனிடம் ஒரு மந்திரப் பிரம்பைக் கொடுத்தார்.

'இந்தா, இதை வைத்துக் கொள்! இது உன் கவலையைப் போக்கும்!' என்று கூறிவிட்டுப் போய் விட்டார்.

"அரசன் அந்த மந்திரப் பிரம்பை ராஜகுமாரியிடம் கொடுத்தான். அவள் அந்த மந்திரப் பிரம்பைப் பத்திரமாக வைத்திருந்தாள்.

"பூரண சந்திரன் பால்போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அரண்மனை நந்தவனத்தில் ராஜ குமாரி தன் தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். திடீரென்று ராஜகுமாரி பயந்து அலறி விட்டாள். காரணம் ஆகாசத்துக்கும் பூமிக்குமாக ஒரே உயரமா யிருப்பதுபோல் தோன்றிய ராஜ குமாரன் ஒருவன் அங்கே வந்து நின்றதுதான். அவனைக் கண்டு தோழிகளும் அலறி விட்டனர். காவற்காரர்கள் ஓடி வந்து ராஜகுமாரனைப் பிடித்துக் கட்ட முயன்றனர். ஆறடி உயரமுள்ள ராஜகுமாரன் எங்கே? இரண்டு அங்குலம் உயரமுள்ள காவற்காரர்கள் எங்கே?

"லட்சம் லட்சமாகச் சின்ன மனிதர்கள் சேர்ந்து, அந்த ராஜகுமாரனைத் தாக்கித் தொந்தரவு செய்யவே, அவன் அங்கே யிருந்த சலவைக்கல் மேடையில் உட்கார்ந்தான். என்னென்னவோ செய்தும் அவனைக் கட்ட முடியவில்லை. இதற்குள் மந்திரி, சேனாபதி, அரசன் எல்லோரும் அங்கு வந்து விட்டனர்.


"ராஜகுமாரி சலவைக் கல் மேடை மீது ஏறி ராஜ குமாரனைப் பார்த்தாள். அவன் பார்த்தோர் பிரமிக்கத் தக்க அழகு வாய்ந்தவனா யிருந்தான். ஆனால் அவ்வளவு பெரிய ராஜ குமாரனை ரொம்ப ரொம்பச் சின்னவளாகிய ராஜகுமாரி எப்படி மணந்து கொள்ள முடியும்? அவளுக்கு ஒரே கவலையா யிருந்தது.

"இந்தச் சமயத்தில் நல்ல வேளையாக அவளுக்கு உடனே ஒரு யோசனை தோன்றியது. முனிவர் கொடுத்த மந்திரப் பிரம்பினால் ராஜ குமாரனைத் தடவினாள். என்ன ஆச்சரியம்! ஆறடி உயரம் இருந்த ராஜகுமாரன் இரண்டு அங்குலமாகி விட்டான்! எல்லோருக்கும் ஆனந்தம் தாங்கவில்லை.

"அப்புறம் கேட்கவேண்டுமா? அந்த ராஜ குமாரனுக்கும் ராஜகுமாரிக்கும் பிரமாதமாகக் கல்யாணம் நடந்தது!" என்று அம்மா கதையை முடித்தாள். ராஜுவும் தூங்க ஆரம்பித்தான்.



சகோதர சகோதரிகளே! இந்த நூல் நூற்புச் சங்கத்தின் தங்க விழாக் கொண்டாட்டத்துக்கு ......




என்னைத் தலைமை வகிக்க அழைத்ததற்கு முதலாவதாக என் வந்தனத்தைச் செலுத்துகின்றேன்......



இரண்டாவதாக, இச் சங்கம்...... ஸ்தாபிதமாகி இன்றுடன்...... இன்றுடன் ... (பக்கத்திலிருப்பவரிடம்) இன்றுடன் எத்தனை வருஷங்கள் ஆகின்றன?

தரிசனம் தந்தார்!



சென்ற 14-11-46 அன்று திருச்செந்தூர் வேலன் ஆலயம் ஹரிஜனங்களுக்குத் திறந்து வைக்கப் பெற்றது ....




அப்போது மேற்படி திறப்புவிழா வைபவத்துக்குத் தமிழ்நாட்டுப் பிரமுகர்கள் பலர் விஜயம் செய்திருந்தார்கள்.

மனிதர்களே!..

சரும ஆரோக்கியத்திற்கு

ரெக்ஸோனாவை

உபயோகியுங்கள்





ஸ்திரீகளுக்குத்தான் முக வசீகரத்திற் கேற்றது ரெக்ஸோனா சோப்பென்று அவசரப்பட்டு எண்ணிவிடாதீர்கள். சரும-ஆரோக்கியத்தை உயர்வாகக் கருதும் ஒவ்வொருவருக்கும் அது ஒரு முக்கிய டாய்லெட் சோப்பாகும். மனிதர்கள் சிறப்பாய் அனுபவிக்கிற நேர்த்தியான, மனதிற்குகந்த, உற்சாகத்தை அளிக்கும் சோப் அதுதான். இந்த நேர்த்தியான, பசுமைவாய்ந்த, விரைவில் நுரையை உண்டாக்கும் சோப்பின் ஒரு சிறந்த நன்மை என்னவென்றால், சுகத்தை யளித்து, சரும வியாதிகளைப் போக்கும் கிருமி நாசினியாகிய *கேடில் என்னும் மருந்து அதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ரெக்ஸோனாவின் ஏராளமாய் விரைவிலேற்படும் நுரை வெகு சீக்கிரத்தில் ஆரோக்கியத்தை அளிக்கும் கேடில் என்னும் மருந்தை உங்கள் சருமத்தின் ஒவ்வொரு அடிப்பாகத்திலும் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. அங்கேதான் சரும உபத்திரவங்களும், சரும மாசு மறுக்களும் அதிகமாய் அடிக்கடி உண்டாகின்றன. இவ்விதமாக, உங்கள் சருமம் முழுவதும் சுகமடைந்து, சுத்திசெய்யப்பட்டுத் தூய்மையையும் அடைகிறது.

ரெக்ஸோனாவை ஒழுங்காக உபயோகித்தால், எவ்வளவு எளிதாக சரும-ஆரோக்கியம் விருத்தியாகுமென்றும், முழுச் சரும-ஆரோக்கியத்தைப் பாதுகாக்கக் கூடுமென்றும் நீங்கள் இதிலிருந்து அறியலாம். ஆகையால், இந்தப் பசுமை வாய்ந்த விரைவில் நுரையைத் தரும் மருந்திடப்பட்ட சோப்பை உபயோகிக்க இன்றே ஆரம்பியுங்கள். அதை உபயோகித்துக்கொண்டே இருங்கள்.

குறிப்பு:—சரும அழகிற்குச் சரும சுகமே அடிப்படை யென்கிற விஷயம் ஞாபகத்தில் வைக்கக்கூடிய ஒரு உண்மையாகும். தன் சருமம் அதிக நேர்த்தியானதென்று ஒரு ஸ்திரீ எவ்வளவு பெருமை பாராட்டிக் கொள்ளுகிறாளோ அவ்வளவு உரிமை ஒரு மனிதனுக்கும் உண்டு.

★ரெக்ஸோனாவிலுள்ள கேடில் ஒப்பற்ற கிருமி நாசினியாகிய ஒரு கலப்பு மருந்து. சரும சுகத்திற்கு அதிக சக்தி வாய்ந்தது. குணமளித்துப் போஷிக்கும் தைலம் சேர்ந்தது. சுகத்தைத் தந்து காப்பாற்றும் தன்மையுள்ள கேடில் யாவராலும் மதிக்கப்பட்டு விஞ்ஞானிகளால் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள். வெட்டுக்காயங்கள், புண்கள், கட்டிகள், கரப்பான், ரணங்கள், முகப்பருக்கள், அரிப்புகள், சிரைப்புகள், கடிகள், மசமறுக்கள் முதலிய எல்லா சரும வியாதிகளுக்கும் ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள்



REXONA PROPRIETARY LIMITED

கம்பர் தரும் காட்சி

160. முத்துக் கண்ணீர்

டி.கே.சி.

சீதைமேல் ஆசைகொண்ட ராவணன், மாமன் மாரீசனைக் கூப்பிட்டு ஒரு தந்திரம் செய்யச் சொன்னான். "பொன் மான் வடிவம் பூண்டு சீதையினிடம் போ!" என்று சொன்னான்.

மாரீசனுக்கோ ராம பாணம் இன்ன வேலை செய்யும் என்பது தெரியும். ரொம்ப ரொம்ப அஞ்சுகிறான். ஆனாலும் ராவணனுடைய வார்த்தைக்கு மறு வார்த்தை சொல்ல முடியாமல், அபூர்வமான அழகும், பிரகாசமும் கொண்ட மானுருவம் கொண்டவனாய், சீதை இருந்த பர்ணசாலைப் பக்கமாகப் போனான்.

இந்த நிலையில் சீதாபிராட்டியார் ஆசிரமத்தை விட்டு வெளியே நடந்து போகிறார்.

பொய்யாம் என
  ஓதுபு றஞ்சொலி
    னால்
நையா இடை
  நோவந டந்தன
    ளால்,
வைதே கிதன்
  வால்வளை மென்கைஎ
    னும்
கொய்யா மல
  ரால்மலர் கொய்துறு
    வாள்.

[பொய்யாம் என ஓது புறஞ்சொலினால்; இது இடை அல்ல, ஏதோ பொய்த் தோற்றந்தான் என்ற எனனச் சொல்லால்; நையா இடை நோவ: மனம் நொந்துபோய் இடையானது வருந்த; நடந்தனளால்: நடக்கும் போது இடை துவண்டு வந்தது அவ்வளவு அழகாக இருந்தது; நம்முடைய உணர்ச்சியை யெல்லாம் கவரும்படி அவ்வளவு அழகாக இருந்தது நடையும் இடையின் நெளிவும்; வைதேகி: விதேக ராஜனது வம்சத்தில் பிறந்த சீதை; தன் வால்வளை மென்கை எனும்: வளை அணிந்த மெல்லிய கை யென்னும்; கொய்யா மலரால்: கொய்யவே தோன்றினாலும் கொய்ய இயலாத மலராய் இருக்கிறது சீதையின் கை—அந்தக் கையாகிய மலரால்; மலர் கொய்துறுவாள்: கொடி செடிகளிலுள்ள மலர்களைக் கொய்கிறாள்.

குறிப்பு :—சீதை வெளியே வந்தாள், மலர் கொய்தாள் என்னும் அழகிய காட்சியை இசையிலேயே வைத்துத் தந்திருக்கிறார் கவிஞர். ரொம்பவும் அனுபவிக்க வேண்டிய செய்யுள் இது.]

மாயமான் வந்து சீதை முன் நின்று விட்டது. அவளுக்கும் அதன்மேல் அபார ஆசை உண்டாகி விட்டது. "இதைப் பிடித்துத் தரச் சொல்லுவோம்" என்று எண்ணிப் பர பரப்புடன் நடக்கிறாள்.

நெற்றிப் பிறை
  யான்முனம் நின்றிட
    லும்,—
முற்றிப் பொழி
  காதலின் முந்துறு
    வாள்,
'பற்றித் தரு(க)
  என்பன்'எ னப்பதை
    யா,
வெற்றிச் சிலை
  வீரனை மேவின
    ளால்.

[நெற்றிப் பிறையான் முனம்: பிறை போன்ற நெற்றியையுடைய சீதையின் முன்னிலையில்; நின்றிடலும்: மாயமான் வந்து நிற்கவும்; முற்றிப் பொழி காதலின் முந்துறுவாள்; என்றும் இல்லாத ஒரு ஆசையோடு முன்னே வந்தாள்; பற்றித் தருக என்பன் என: பிடித்துத்தா என்று சொல்லுவேன் என்று; பதையா: எங்கே மான் ஓடிவிடுமோ என்ற பயத்தினால் ஏற்பட்ட பரபரப்போடு; வெற்றிச் சிலை ஏந்திய ராமனிடம் போய்ச் சேர்ந்தாள்.]

"மான் ஒன்று வந்து நிற்கிறது; ரொம்ப அழகாக இருக்கிறது; அதைப் பிடித்துத் தரவேண்டும்" என்று ராமனிடம் சீதை சொல்லுகிறாள். ராமனும் அதற்கு இசைந்தவனாய்ப் புறப்படுகிறான். அப்போது லக்ஷ்மணனுக்கு ஒரு சந்தேகம் உண்டாகிறது:

"இதில் ஏதோ வஞ்சகமிருக்கிறது. மானுக்குப் பின்னால் பகைவர்கள் பலர் நிற்கலாமென்று தோன்றுகிறது. ஆதலால் யோசனை பண்ணித்தான் இந்த விஷயத்தில் பிரவேசிக்க வேண்டும்.



பகைவர் எத்தனை பேர் இருந்தபோதி லும் குற்றமில்லை. நான் போய் அம்பு எய்து மானைக் கொண்டு வருகிறேன். மாயமானாய் இல்லாமலிருந்தால் உயி ரோடு பிடித்துக் கொண்டு வருகி றேன்'' என்றான்.

சந்தம்

தானன தானன தன்
தானன தானன தன்

'அடுந்தன எண்ணிச்செய் தல்
அண்ணலே! அமைதிஅன் றோ?
விடுத்(து)இதன் பின்நின்றார் கள்
பலருளர் எனினும்,வில் லால்த்
தொடுத்தவெம் பகழிதூ வித்
தொடர்ந்தனென் விரைந்து
சென் று
படுக்குவென், அதுஅன்று யின்
பற்றினென் கொணர்வென்' என்
றான்.

[அடுந்தன எண்ணிச் செய்தல்: நம்மை அடுத்து நேரும் காரியங்களை யோசனை பண் ணிச் செயல் செய்தல்; அண்ணலே: ராமனே; அமைதி அன்றோ: பொருத்தமான காரிய மல்லவா; விடுத்து இதன் பின் நின்றார்கள் பலர் உளர்: முன்னே மானை விட்டு விட்டுப் பின்னே நிற்கும் பகைவர் பலர் என்று தோன்றுகிறது: எனினும்: என்றாலும்; தொடர்ந்தனென் விரைந்து சென்று; தொடர்ந்து வேகமாய்ப் போய்: படுக்குவென்: கொன்று விடுகிறேன்; அது அன்று ஆயின்: மாய மானாக இல்லா விட்டால்; பற்றினென் கொணர்வென் என்றான்: பிடித்துக் கொண்டு வருகிறேன்,—என்றான் லக்ஷ்மணன்.]

லக்ஷ்மணன் சொன்ன வார்த்தை சீதைக்குப் பிடிக்கவில்லை. 'ஏதோ காம் கேட்டது ராமனை. அவன் பிடித்துத் தர இணங்கி யிருக்கிறான். இந்த வேளை லக்ஷ்மணன் வந்து அதிகப் பிரசங்கித்தனமாய் மான் அப்படி இப்படி, பொல்லாதது என்றெல்லாம் பேசுகிறான். அவன் மானைப் பிடித்துத் தந்தால் என்ன, தராமல் போனால் என்ன?' என்று கடுங்கோபம் வந்து விட்டது சீதைக்கு.

ஆயிடை அன்னம்அன் னாள்
அமுதுருத் தனையசெய் ய
வாயிடை மழலையின் சொல்
கிளியினிக் குழறிமாழ் கி,
'நாயக! நீயேபற் றி,
நல்கலை போலும்?' என் று
சேயரிக் குவளைமுத் தம்
சிந்துபு சிதறிப்போ னாள்.

[ஆயிடை: அந்த நேரத்தில்; அன்னம் அன்னாள்: அன்னப் பறவை போன்ற சீதை யானவள்; அமுது உருத்தனைய: தேவா மிர்தத்தைக் கொட்டிய மாதிரி அவ்வளவு இனிமையான; செய்ய வாயிடை மழலையின் சொல்: சிவந்த வாயிலிருந்து மழலைச் சொல்லை; கிளியினிக் குழறி: கிளியைப் போலவே குழறி: மாழ்கி: மனம் நொந்தவ ளாய்; நாயக நீயே பற்றி நல்கலை போலும் என்று: நாயகனே, நீயே பிடித்துக் கொடுக்க மாட்டாயோ என்று சொல்லி; சேயரிக் குவளை முத்தம்: செவ்வரி படர்ந்த குவளை போன்ற கண்ணிலிருந்து, முத்துப் போலும் கண்ணீர்த் துளிகளை; சிந்துபு சிதறிப் போனாள்: தலையை ஒரு அசைப்பு அசைத்ததில் நாலா பக்கமும் கண்ணீர்த் துளிகள் சிந்திச் சிதறும்படியாக, அந்த இடத்தை விட்டுப் போய்விட்டாள்.]

பெண்களுடைய மன நிலையையும் அவர்களுக்கு ஏற்படும் சலனம், கோபம் எல்லாவற்றையும் அழகாய் வர்ணித்திருக்கிறது, செய்யுளில். சீதையின் உள்ளத்தையும் செயலையும் உற்று நோக்குவோமானால் உண்மை யான உணர்ச்சி ஒன்று அபூர்வமான அழகோடு நடமாடுவதைச் செய் யுளில் பார்க்கலாம். தெவிட்டாத கவியுருவம் வாய்ந்தது செய்யுள்.

கிடைப்பது சொற்பமே யாகும்போது

—சிறந்தவைகளையே பார்த்து வாங்குங்கள்!

இந்தியாவில் எல்லா மில்லுகளையும் போலவே நாங்களும், சர்க்கார் கட்டுப்பாடுகளனுசரித்து முக்கியாவசியமான துணி ரகங்கள் மட்டுமே தயாரித்து வருகிறோம். எனினும், எங்களது தற்பொழுதைய ட்ரில்கள், ட்வில்கள், கோட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள், லாங்கிளாத்து — எல்லாம், பக்கிங்ஹாம் & கர்னாடிக் மில்ச் சரக்குகளின் நிரந்தர எடுத்துக்காட்டுகளா யிருந்து வந்துள்ள அதே உழைப்புத் தன்மையும், இழை நேர்மையும் வாய்ந்தவைகள்தான்.

உலகினிலெங்குமே தலைவிரித்தாடும் இந்த ஜவுளிப் பஞ்சத்தின்போது, கிடைக்கும் சொற்பத் துணிமணிகளைக் கொண்டு இன்னும் பல காலம் சமாளித்து வருவதை விடுத்து நம்மனைவருக்கும் வேறு கதிமோக்ஷமில்லை. இப் பஞ்சகாலத்தில், உங்கள் பணத்திற்குச் சிறந்த பெறுமதி கிடைக்க, கீழே காணும் வர்த்தக முத்திரைகளை அறிகுறியாகக் கொண்ட பக்கிங்ஹாம் & கர்னாடிக் மில்ச் சரக்குகளையே, சாத்தியமாகும்போதெல்லாம் மறவாமல் வாங்குங்கள்.

யுத்தகாலம்

சென்ற ஆறு ஆண்டுகளில் நாங்கள் சர்க்காருக்கு 43,20,00,000 கஜம் துணி சப்ளை செய்திருக்கிறோம். ஆனது, யுத்த காரியங்களுக்காக வுள்ள எங்களது துணி யுற்பத்தி வருடத்தில் 41·000 மைலெனக் காட்டுகிறது. ஏழெட்டு மாதம் கூடுகையிலுள்ள உற்பத்தியானது நம் பூமியை ஒருதரம் சுற்றிக் கட்டப் போதுமான நீளம் வருமென்றால் பாருங்களேன்!



பக்கிங்ஹாம் & கர்னாடிக் மில்தான் 1900-ல் இந்தியாவில் காக்கித் துணி நெசவை முதன் முதலாக ஆரம்பித்தவர்கள், யுத்தகாலத்தில் அவர்கள் எப்போதும், ஏராள பொறுப்பை மேற்கொள்ளத்தான் செய்கிறார்கள்.

சமாதான காலம்

எங்களது இன்றைய உற்பத்தியளவு மாதம் 60,00,000 கஜங்களுக்கு மேலாகவே வரும். ஆனால் ரயில் போக்கு வரவுக் கஷ்டங்களால், சில தூர ஸ்தலங்களுக்கு எங்களால் சரக்குகள் தாராளமாக விநியோகிக்க முடிவதில்லை.

இரசாயனப் பொருட்களுக்கும் சாயங்களுக்கும் ஏற்பட்டுள்ள பஞ்சம் காரணமாக, யுத்தத்திற்கு முன் ஜனங்களின் மனதைக் கொள்ளை கொண்டிருந்த அனேக ரகங்களும், மற்றும் பற்பல கலர் டிஸைன்களும் தயாரிப்பது சாத்தியமாகாமலிருக்கிறது. ஆனால், இந்தத் தடை தாற்காலிகமென்றே நம்புகிறோம்.

இதற்கிடையே, நாங்கள் ஏராளமாகத் தயாரிக்கும் அவசிய துணி தினுசுகள் உங்கள் உபயோகத்திற்குகந்தவைதான்-நீடித்துழைக்கவும் செய்யும்.

சர்க்கார் கட்டுப்பாடு அமுலுக்கு வருவதற் கெத்தனையோ முன்பு, நாங்கள் விலைகளை மலிவாக்கியே யிருந்தோம். எங்கள் சரக்குகள் கட்டுப்பாடு விலைகளில், உங்கள் பணத்திற்குச் சிறந்த பெறுமதியாகவே இன்னும் பெரும்பாலு மிருந்து வருகின்றன.

தி பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி, லிட்.,

சென்னை

மானேஜிங் ஏஜண்டுகள்: **பின்னி & கோ.,** (சென்னை) **லிட்.**

கௌரி கல்யாணம்

"விதூ"

பீ. ஏ. பரீக்ஷை எழுதிவிட்டு ஊருக்கு வந்திருந்தான் சங்கரன். அவனுடைய வீட்டுக்குப் பத்துப் பன்னிரண்டு வீடுகளுக்கப்பால் வெகு நாட்களாகப் பூட்டியிருந்த வீட்டில் புதிதாகக் குடியேறியிருந்த வக்கீல் அனந்தராமனின் பெண் கௌரியை முதல் தடவை பார்த்தவுடனேயே அவனுடைய காதலைப் பற்றின குயுக்தியான அபிப்பிராயங்கள் மறைந்து விட்டன! குறுகுறுப்பான முகமும் வசீகரமான பேச்சும் கொண்ட அந்தப் பெண் தேவதை சங்கரனை ஆகர்ஷித்து விட்டாள்! ஆகவே நிமிஷத்துக் கொருதரமாவது அவளைக் காணவிட்டால் சங்கரனுக்கு என்னமோ போல் இருந்தது! எனவே, வக்கீல் அனந்தராமனின் வீட்டு வாசலை அவன் அடிக்கடி முற்றுகையிட ஆரம்பித்தான்!

சங்கரன் வருவதை எதிர்பார்ப்பது போல கௌரியும் ஒவ்வொரு தடவையும் அவன் கண்களில் படத் தவறமாட்டாள். வலது கரத்தினால் முகத்தை ஏந்திக்கொண்டு ஜன்னலில் உட்கார்ந்து காட்சி யளிப்பாள் ஒரு சமயம். மற்றொரு சமயம் நிலைப்படியைப் பிடித்துக்கொண்டு ஒய்யாரமாய் நெளிந்துகொண்டு நிற்பாள்! இன்னொரு தரம், சங்கரன் தன்னைக் காணாமல் தவிப்பதை மாடியில் நின்று பார்த்து மகிழ்வாள்!

சங்கரன் உள்ளத்தில் பெரிய பாரம் ஒன்று இருப்பதை அவனுடைய நடவடிக்கைகளிலிருந்து கண்டுகொண்டாள் சங்கரனின் தாயார் அலமு அம்மாள். இரண்டொரு தடவை சங்கரனிடம் அதைப்பற்றிக் கேட்டதற்கு "மனது சரியாயில்லை!" என்று எதையோ சொல்லித் தப்பித்துக் கொண்டான்! சங்கரன் உண்மையைச் சொல்லியிருந்தால் அலமு அம்மாள் தடை ஒன்றும் சொல்லியிருக்கப் போவதில்லை! கௌரியின் அடக்க ஒடுக்கத்தையும் லக்ஷ்மீகரம் பொங்கும் அவளுடைய களையான முகத்தையும் அவளுடைய தாய் பாகீரதியின் பதவிசும் கண்ட அலமு அம்மாள் கௌரியை மாட்டுப் பெண்ணாக அடைய வேண்டும் என்று எண்ணம் கொண்டு எவ்வளவோ நாட்களாயிற்று! ஆனால் சங்கரன் தான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன் என்று அம்மாவுக்குத் தெரிந்தால் எப்படி யிருக்குமென்று நினைத்துப் பார்க்கக்கூட வெட்கப்பட்டான்.

"ஓ! இதென்ன பயங்கொள்ளித்தனம்! அவளும் நம்மிடத்தில் காதல் கொண்டிருக்கிறாள் என்று அறிந்ததும் ஒரு காதல் கடிதம்கூட எழுதிப் பார்க்காமல் இருப்பதா?" என்று மனதைத் திடம் செய்து கொண்டு பேனாவைப் பிடித்தான் சங்கரன். பல நாவல்



களில் வாசித்திருந்த காதல் கடிதங்களின் சாராம்சத்தை யெல்லாம் பிழிந்தெடுத்து ஒரு கடிதம் எழுதி முடிப்பதற்குள் உன் பாடு என்பாடு என்றாகி விட்டது அவனுக்கு! அத்துடன் நின்று விட்டதா? அதைக் கௌரியின் கையில் சேர்ப்பதற்கு அவன் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டியதாயிற்று! அதன் பிறகாவது சங்கரனுக்கு நிம்மதி ஏற்பட்டதா என்றால் அது தான் இல்லை! எதையோ திருடிவிட்டவன் போலக் காணப் பட்டான் அவன்! சிறு சப்தம் கேட்டாலும் கௌரியின் பதில் கடிதம்தான் வந்து விழுகிறதாக்கும் என்று மிரண்டு மிரண்டு சுற்று முற்றும் பார்ப்பான். இரண்டு நாள் வரை சிரமப்பட்டுக் காத்திருந்தும் கௌரியிடமிருந்து ஒரு பதிலும் அவனுக்கு வரவில்லை! அவனுக்கு உடனே விஷயம் விளங்கி விட்டது! கௌரி



அவனைக் காதலிக்க வில்லையோ என்னவோ? ஏமாற்றம்! சங்கரனுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது!

சாயந்திரம் வக்கீல் அனந்தராமன் வீட்டுப் பக்கம் சென்றபோது கௌரி வாசலில் தான் நின்றுகொண்டிருந்தாள். "என்ன கௌரி! என்னுடைய கடிதத்துக்கு பதில் ஒன்றும் கிடையாதா?" என்று கேட்கத் தான் எண்ணினான் சங்கரன்! ஆனால் தொண்டையைத்தான் என்னவோ வந்து அடைத்துக்கொண்டு விட்டதே! ஏக்கம் நிறைந்த பார்வை ஒன்றைப் பிரயோகித்து விட்டுத் திரும்பினான் சங்கரன். அதற்குள் கௌரி உள்ளே திரும்பி "அப்பா!" என்று கூப்பிட்டாள். சங்கரன் திடுக்கிட்டு நின்றான். "மிஸ்டர் சங்கரன்! கொஞ்சம் வந்துவிட்டுப் போங்கள்!" என்று அனந்தராமனின் குரலைக் கேட்டதும் சங்கரன் தேள் கொட்டியதுபோல் ஆனான்.

சங்கரனைத் தன் தகப்பனாரிடத்தில் பிடித்துக்கொடுத்துவிட்டு உள்ளே ஓடி மறைந்தாள் கௌரி! அனந்தராமனின் பின்னால் குளிரில் நடுங்கும் பூனைபோல் பின் தொடர்ந்து சென்ற சங்கரன் முன் ஹாலை அடைந்ததும் தானாகவே நாற்காலி யொன்றில் உட்கார்ந்து கொண்டான்.

கையில் ஒரு கடிதத்துடன் "இது யார் எழுதினது? உமக்குத் தெரியுமா?" என்று குறுக்கு விசாரணை செய்யும் தோரணையில் வக்கீல் அனந்தராமன் கேட்டதும் சங்கரனின் உடம்பு வியர்த்தது; கடிதத்தை உற்றுக் கவனித்தான். அவன் கையெழுத்துத்தான். சந்தேகமில்லை! கௌரிக்கு அவன் எழுதிய காதல் கடிதம்தான் அது. வக்கீலின் கேள்விக்குப் பதில் சொல்வதற்குப் பதிலாக கைக் குட்டையை எடுத்துத் துடைத்துக் கொண்டான் சங்கரன்.

"சரி, உங்களால் பதில் சொல்ல முடியாதது இயற்கைதான். போகட்டும்; உங்கள் தகப்பனார் கன்னிக் கோட்டையில்தானே இருக்கிறார்?" என்று பேச்சைத் திருப்பினார் வக்கீல்.

அந்த மட்டும் முதல் கேள்விக்குப் பதில் சொல்லாமல் தப்பியது சிறையிலிருந்து வெளியே வந்தாற்போலிருந்தது சங்கரனுக்கு. ஆனால் இவர் ஏன் அப்பாவைப் பற்றி விசாரிக்கிறார்? மறுபடியும் ஒரு சுழல்! "ஆமாம்!" என்று சொல்லுவதற்குள் அவன் தொண்டை கம்மிவிட்டது.

“இந்தக் கவரின்மேல் அவருடைய முழு விலாசத்தையும் எழுதுங்கள்!” என்று தலை ஒட்டிய கவர் ஒன்றை நீட்டினார் அனந்தராமன்.

நான் இப்படி ஒரு வக்கீலின் கையில் நன்றாகச் சிக்கிக்கொண்டு விட்டோமே என்று குழம்பினான் சங்கரன். “எமகாதகரா யிருக்கிறாரே இவர்! இந்தக் கடிதத்தை அப்பாவிடம் அனுப்ப என்ன வெல்லாமோ செய்கிறார் இவர்!” என்று பயந்தான் அவன். கவரைக் கையில் வாங்கிக் கொண்டான். பேனாவை நடுங்கும் கைகளால் எடுத்த அவனுக்கு மின்னல்போல் ஒரு யோசனை உதித்தது. உடனே கவரின் மேல் ஏதோ ஒரு விலாசத்தை எழுதி வக்கீலின் கையில் கொடுத்தான். கவரைத் திரும்பப் பெற்றுக் கொண்ட அனந்தராமன், “தாங்ஸ்! இனி மேலே நடக்க வேண்டியதை நான் பார்த்துக் கொள்கிறேன்! நீங்கள் போகலாம்!” என்று சங்கரனுக்கு உத்தரவிட்டார்.

அதன் பிறகு சங்கரன் அசதி மறதியாகக்கூட கௌரியின் வீட்டுப் பக்கம் போவது கிடையாது.

எழெட்டு தினங்கள் ஓடி மறைந்தன. அன்று சங்கரன் சாப்பிட உட்கார்ந்த போது அலமு அம்மாள் விஷமச் சிரிப்புடன் பிள்ளையை நோக்கினாள். சங்கரனுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. “ஏண்டா சங்கரா, வக்கீல் அகத்தைப் பற்றி ஒரு நாள் அக்கரையாக விசாரித்தாயே? என்னிடம் அப்போதே ஒரு வார்த்தை சொல்லியிருக்கப் படாதோ! கடைசியில் இப்படி அசட்டுப் பிசட்டென்று நடந்துகொண்டு விட்டாயே!” என்று தாயார் கேட்டபோது சங்கரனுக்குச் ‘சொரேர்’ என்றது!

“என்ன அம்மா? அப்பா ஏதாவது எழுதியிருக்கிறாரா?” என்று கேட்டான். அலமு அம்மாள் மனதிற்குள் சிரித்தாள்.

“அப்பா எப்படியடா எழுத முடியும்! அது தான் முடியாதபடி பொய் விலாசத்தைக் கொடுத்துட்டு வந்தாயே!” என்று சொல்லிக் கொண்டே மோர் பரிமாறினாள்.


சங்கரனுக்கு அவமானம் தாங்கவில்லை. என்னவோ ஞாபகமாகத் தாயார் பரிமாறிய மோரில் கையை அலம்பிக் கொண்டு எழுந்து விட்டான்! அலமு அம்மாள் திடுக்கிட்டுப் போனாள்! “என்னடா! பித்துக்குள்ளி! புத்தி ஸ்தானமில்லையா? மோரில் கையலம்பிவிட்டு எழுந்திருக்கறாட்டே? உன்னைப் போல அசட்டுப்பிள்ளையை நான் பார்த்ததே கிடையாது! அந்தப் பெண்ணுக்கும் உன்னிடம் ஆசையாம்! கௌரியின் இஷ்டத்துக்கு மாறாக ஒன்றுமே செய்ய மாட்டாராம் அந்த வக்கீல். பெரிய வாளைக் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அப்பாவின் விலாசத்தைக் கேட்டிருக்கிறார். நீ பொய் விலாசத்தைக் கொடுத்து உன்னையே ஏமாற்றிக் கொள்ளப் பார்த்தாய்! வக்கீல் போட்ட கடிதம் உடனே திரும்பி வந்து விட்டதாம்! உடனே பாகீரதி என்னிடம் ஓடிவந்தாள்! நீ செய்ததைச் சொல்லிச் சொல்லிச் சிரித்தோம்! அப்புறம் உன் ஜாதகத்தையும் அப்பா விலாசத்தையும் கொடுத்தேன். உங்கள் மனசுபோலவே ஜாதகமும் வெகு பொருத்தமா யிருக்கிறதாம்!” என்று முடித்து விட்டு அலமு அம்மாள் பொங்கும் மகிழ்ச்சியுடன் சங்கரனைப் பார்த்தாள்.

“அப்படியானால் அந்த வக்கீல் ஏன் அன்றையதினம் அப்படிப் பயமுறுத்தினார்?” என்று கேட்டான் சங்கரன்!

“போடா அசடு! அவர் பேசறதே அப்படித்தான் இருக்கும்! வக்கீலோன்னோ?” என்று சொல்லிக் கொண்டே உள்ளே எழுந்து சென்றாள் அலமு அம்மாள்.

கௌரியை ஒரு தடவை பார்த்தால் தேவலை போலிருந்தது சங்கரனுக்கு. உடனேயே, வக்கீல் வீட்டை நோக்கி நடையைக் கட்டினான் சங்கரன்!

இளைத்தது யார்?





நீங்கள் இன்று
மக்லீன்ஸால் பல்
துலக்கினீர்களா?




நியதமான முறை
தானே அது!



ஆபீசுகளில் வேலை செய்யும் இக் காலத்திய இள மங்கைகள் சிறந்த பெறுமதியைக் கண்டறிந்து கொள்ளக் கற்றிருக்கின்றனர். மக்லின்ஸின் அரிய சுத்திகரண, பூதிகாரசகுணங்கள் காரணமாகவும், அதன் சிக்கனத்தைக் கண்டும் அவர்கள் அதையே தெரிந்தெடுக்கின்றனர். நீங்களும் அதை நியதமான முறையாகச் செய்து கொள்ளுங்கள். இன்றே ஒரு ட்யூப் வாங்கவும்.

எல்லா கெமிஸ்டுகளிடமும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்



யசோதாரா

ஆசிரியர்: விச்வம்பரநாத் கௌசிக்
மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

இம்மாதிரி சமயங்களில் யசோதாரா, தனது பழைய இன்பக் கனவுகளை எண்ணிக் கண்ணீர் பெருக்குவாள். இல்லையேல், உலகத்தின் விசித்திரப் போக்கையும் நிலையின்மையையும் எண்ணித் தனக்குத் தானே சிரித்துக் கொள்வாள். இதுதான் அவளுடைய தினசரி வாழ்க்கையாக இருந்து வந்தது. அதே போல் நந்தராமும் தன் அந்தக் காலத்து வாழ்க்கையை எண்ணிக் கண்ணீர் பெருக்குவான். "நாம் அந்த விநோதன் சொன்ன வார்த்தைகளுக்குச் செவி சாய்க்காமல் போனேமே! அவன் சொல்லைக் கேட்டிருந்தால் இப்படியெல்லாம் ஆகியிருந்திருக்குமா? இந்தப் பிச்சைக்காரப் பிழைப்புப் பிழைக்கவேண்டியிராது. ராமநாத பாபுவை அண்டிப் பிழைக்கவும் வேண்டியிராது. அதுமட்டுமல்ல. ராமநாத பாபுவுக்கும், ஜஸ்ஸோவுக்கும் இந்தக் காதல் புரிய சந்தர்ப்பமே வாய்த்திருக்காது. ஜஸ்ஸோவும் என் பேச்சைக் கேட்டுக் கல்யாணம் செய்து கொண்டிருப்பாள். வாழ்க்கையில் நான் இவ்வளவு துயரப்பட வேண்டியிராது. ஆனால் இப்பொழுது அதைப்பற்றிச் சிந்தித்து என்ன பயன்?" என்று எண்ணி வருந்துவான். நல்ல வேளை! ஸோனுவைப் பிரிந்ததனால் ஏற்பட்ட துயரத்தைக் காலதேவன் மறக்கச் செய்துவிட்டான். ஆனால் அவன் செய்த அந்தச் சிறு பிழை! அதன் காரணமாகத்தானே, அவன் இவ்வளவு துயரப்பட வேண்டியிருக்கிறது! அவன் ஸோனுவைத் திருட்டுத்தனமாக அழைத்துக்கொண்டு ஓடியது பாபம்தான் போலும்! இல்லாவிட்டால் இப்படித் துயரப்பட நேரிடுவானேன்! துயரம் பாபத்தினால் தானே ஏற்படுகிறது! ஆமாம். அவன் செய்தது பாபம்தானா? கடவுள் சந்நிதானத்திலும் அது பாபமாகத்தானா கருதப்படும்? அப்படி இருக்கவே முடியாது. சமூகம் தான் பாபமாக நினைக்கிறது. சமூகத்தில் வழங்கி வரும் சட்ட திட்டங்களை மீறுவதும் பாபம்தானே! இல்லாவிட்டால் அவனுக்கு இப்படிப்பட்ட தண்டனை கிடைப்பானேன்! ஸோனுவை அழைத்துக்கொண்டு அவன் ஓடியது பாபம்தான். அதனால்தான் இவ்வளவு துயரம் அவன் அனுபவிக்கிறான். கல்கத்தாவில் ஸோனுவுடன் நடத்திய வாழ்க்கைக்குப் பிறகு அவன் எங்கே சுகித்திருந்தான்! இந்தச் சமயம் அதை நினைத்தால்கூட அவனுக்கு நிம்மதி ஏற்படுவதில்லை. துயரமும் அமைதியின்மையும் ஆட்டி வைக்கும் காலத்தில், சுகம், அமைதி இவைகளின் இன்ப நினைவுகள்கூட மனதை ஆட்டித்தான் வைக்கும்போலும்.

"இந்த வாழ்க்கையையே மாற்றிப் புது முறையில் அமைத்துக்கொண்டுவிட்டால்... இவ்வளவு துயரப்படவேண்டியிராதோ!" என்று கூட அவன் சிற்சில சமயங்களில் எண்ணுவது உண்டு. ஆனால் எப்படி மாற்றிக்கொள்வது என்பதுதான் அவனுக்குப் புலப்படுவதில்லை. யசோதாராவைக் காணும் பொழுதெல்லாம் அவனுடைய துயரம் இன்னும் பன்மடங்கு அதிகரித்து விடும். அவளோ வயது வந்தவள்; யௌவன வளர்ச்சி பெற்றவள்; வாழ்வின்பத்தை நுகர வேண்டிய பருவத்தை அடைந்தவள். அப்படிப்பட்ட அவள், வீட்டின் ஒரு மூலையில், கவனிப்பாரற்று, அநாதரவாகவும், துயரமே உருவெடுத்தவளாகவும் இருப்பதைக் காணும் பொழுதெல்லாம், அவனுடைய பெற்ற மனம் நொந்து புண்ணாகிவிடும். சில சமயம், 'தான் செய்த பாபங்களுக்கெல்லாம், யசோதாராதான் பிராயச்சித்தமாக உருவெடுத்து வந்திருக்கிறாளோ' என்று கூட அவன் எண்ணுவது உண்டு.

இதே மாதிரி, அந்த இருவருடைய வாழ்க்கையும் 'சப்' பென்று ஓடிக்கொண்

டிருந்தது. ஒரு நாள் நந்தராம் யசோதராவைப் பார்த்து, "என் அம்மா, இப்படியே, உன வாழ்க்கை பூராவையும் கழிக்கப் போகிறாயா? கண்கொண்டு உன் நிலைமையை என்னால் பார்க்க முடியவில்லையே! உனக்கு ராமநாதபாபுவைத் தான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று எண்ணமிருந்தால், தாராளமாய்ச் சொல். நான் போய் அவரை வேண்டிக் கொண்டு எப்படியாவது சம்மதிக்கச் செய்து விடுகிறேன்!" என்றான். யசோதரா துயரம் ததும்பிய புன்முறுவலுடன், "அவர் உன் வார்த்தையைக் கேட்பாரென்று எண்ணுகிறாயா?" என்று கேட்டான்.

"எப்படியாவது அவரைச் சம்மதிக்கச் செய்தால் சரிதானே?"


"அவருக்குத்தான் கல்யாணம் ஆகி விட்டதே!" என்றான் யசோதரா.

"அதனால் என்ன! நம்மில்தான் இன்னுமொரு கல்யாணம் செய்து கொள்ளும் பழக்கம் இருக்கிறதே!"

"அப்பா! அவர் சம்மதித்தாலும் நான் சம்மதிக்க மாட்டேன்."

"என்ன? நீ சம்மதிக்க மாட்டாயா?" என்று வியப்புடன் யசோதராவைப் பார்த்துக் கேட்டான் நந்தராம்.

"அப்பா! இனி அவரைக் கல்யாணம் செய்து கொண்டு நான் சுகித்திருக்க முடியுமென்று நீ எண்ணுகிறாயா? இனி இந்த ஜன்மத்தில் எனக்குச் சுகம் கிட்டாது. அவரைக் கல்யாணம் செய்து கொண்டு, அவருடைய சுகவாழ்க்கையைக் குட்டிச்சுவராக்கும் பாபத்தை வேண்டுமானால் நான் என் தலையில் கட்டிக் கொள்ளலாம். என் அப்பா! அந்தப் பாபத்தை நான் ஏற்றுக்கொள்ள வேண்டு



மென்று நீ விரும்புகிறாயா?" என்று கேட்டாள் யசோதரா.

"என் அம்மா, உன் வாழ்க்கை என்ன ஆவது என்று எண்ணுகிறாய்?"

"என் வாழ்க்கைக்கு என்ன? பாவி என் தலையிலே படைத்த பிரமன் இது மாதிரி வாழவேண்டு மென்று எழுதி யிருக்கும் பொழுது யாரால்தான் என்ன செய்ய முடியும்?"

"என்ன! நீ பாவியா? உன் தலையில் இப்படி எழுதுவதற்கு நீ என்ன அம்மா குற்றம் செய்தாய்? ஒரு குற்றமும் அறியாத உனக்குத் துயரத்தை அளிக்க பிரமனுக்குத்தான் ஏது உரிமை! பாபம் செய்தவன் நான் இருக்க அவன் ஏன் உனக்குத் தண்டனை யளிக்க வேண்டும்?"

"அப்பா! நானும்தான் குற்றம் செய்திருக்கிறேன்."

"என்ன? நீயும் குற்றம் செய்திருக்கிறாயா?"

"ஆமாம் அப்பா! கிடைக்கக் கூடாத வஸ்துவின்மேல் ஆசை வைப்பது — முடவன் கொம்புத் தேனுக்கு ஆசை கொள்வது போல—குற்றம் தானே அப்பா!"

சுந்தராம் யசோதராவையே உற்று நோக்கலானான். அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவே இல்லை. சிறிது நேரம் மௌனமாக இருந்த பிறகு, "என் அம்மா, நீ என்ன செய்வதாக உத்தேசம்? ஒரு வழிக்கும் வரமாட்டேன் என்கிறாயே! ஒன்று ராமநாத பாபுவைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். இல்லை, வேறு யாரையாவது கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிக்க வேண்டும். நீ இப்படிப் பிடிவாதம் பிடிப்பது எனக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை. உன்னுடைய மன வேதனையைப் பார்க்கும் பொழுது, வாழ்க்கையின்மீதே எனக்கு வெறுப்புத் தட்டி விடுகிறது...நான் செத்து விட்டால் உன் துயரத்தையாவது என் கண்களால் பார்க்காமல் இருக்கலாமல்லவா!" என்று கூறி சுந்தராம், அழ ஆரம்பித்து விட்டான். ஆனால் யசோதராவின் கண்களில் கண்ணீர் என்ற நாமதேயமே இல்லை. அவள் அதே துயரம் தோய்ந்த புன்முறுவலுடன், "அப்பா, அழுவதனால், மனவேதனை தீர்ந்து போய் விடும் என்று எண்ணுகிறாயா? நீ எவ்வளவு அழுதாலும் அது தீராது. இந்தத் துயரத்திலிருந்து விடுபட விரும்பினால், இந்த அழுகையை மறந்து சிரிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும், அப்பா! தன்னை, உலகத்தை, ஆசைகளை, சிநேகிதர்களை, சத்ருக்களை எல்லாரையும் நினைத்தால் தானாகச் சிரிப்பு வரும். சிரிப்பதில்தான் நன்மை இருக்கிறது. நான் எவ்வளவோ அழுது பார்த்து விட்டேன். அதனால் துயரம் அதிகமாகிறதே தவிரக் குறையவில்லை. சிரிக்கும் பொழுது மனதுக்குச் சிறிது ஆறுதலாவது கிடைக்கிறது. அதனால்தான் சிரிக்கக் கற்றுக் கொள். மனதுக்குச் சிறிது ஆறுதல் கிடைக்கும் என்று சொல்லுகிறேன்" என்றாள்.

"என் அம்மா, இவர்களை யெல்லாம் நினைத்தால் சிரிப்பு வந்து விடுமா? சிரிப்பதற்கு ஒரு காரணம் வேண்டாமா?"

"சிரிப்பதற்குக் காரணங்கள் இல்லையா? 'நாம் உலகத்தை நன்றாக அறியாமல் போனோமே' என்று நம்மை நினைத்துச் சிரிக்கலாம். 'உலகத்திற்கு நம்மை யறிந்து கொள்ளும் சக்தி இல்லையே' என்று உலகத்தை எண்ணிச் சிரிக்கலாமே! நாம் செய்யும் பிழைகள் திருத்த முடியாதபடி சிக்கலா யிருக்கின்றனவே என்று எண்ணும்பொழுது தானாகவே சிரிப்பு வருமே! 'நம்முடைய ஆசைகள் பூர்த்தியடையாமல் போனதற்குக் காரணம், நாம் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதையாக ஆசைப்பட்டோம், அதனால்தான் நிறைவேறவில்லை' என்று எண்ணினால் சிரிப்பு வாராதா? 'சிநேகிதர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்களின் நட்பு எவ்வளவு பொய்மை நிரம்பியது; சத்ருக்களின் விரோதத்திலும் உண்மையில்லையே' என்ற இந்த விஷயங்களை யெல்லாம் மனத்துள் சிந்தித்துப் பார்த்தாயானால் தானாகவே சிரிப்பு வரும், அப்பா! நீ சிரிப்பதற்குக் காரணம் தேட வேண்டிய அவசியமே இராது."

"ஆனால் சிரிப்பது என்பது நம் கைக்குள்ளா இருக்கிறது, ஐஸ்லோ?"

"எதற்கும் பழக்கம் வேண்டும். நான் அழுது அழுது அலுத்துப்போய்ச் சிரிக்கப் பழகிக் கொண்டேன். அதேமாதிரி நீயும் பழகு. தானாக வந்து விடும்."

"மனம், படாத வேதனைப் பட்டுக் கொண்டிருக்கும்பொழுது சிரிப்பாவது வாவாவது? என்னவோ பைத்தியம் மாதிரி நீயும் ஏதோ உளறுகிறாய்?"

"நான் உளறக் கிளறவில்லை. வீடு, ஆசாபாசம் எல்லாவற்றையுமே துறந்து

விட்டு, உலகத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டும். அப்பொழுது தானாகச் சிரிப்பு வரும். நாம் ஊர் சுற்றிப் பிச்சைப் பிழைப்புப் பிழைத்துக் கொண்டிருந்த காலத்தில் இவ்வளவு துயரப் பட்டோமா? நாம் அதை விட்டு விட்டு, சுகத்தை நாட ஆரம்பித்ததிலிருந்து தானே துயரம் நம்மைப் பிடித்துக் கொண்டது, அப்பா?'' என்றாள் யசோதரா.

யசோதராவின் சொற்களைச் சிறிது நேரம் சுந்தரம் ஆழ்ந்து கவனித்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு, "நீ சொல்வது உண்மைதான், ஜஸ்லோ. ஆனால் இந்த சொத்து சுதந்திரம்..." என்று ஆரம்பித்தான்.

"எல்லாவற்றையும் விட்டு விடு. சுகமும் அமைதியும் தராத வஸ்துக்களில் என் நாட்டம் கொள்கிறாய்? அது நமக்குத் தேவையே இல்லை. அதன் மூலம் அமைதியும் சுகமும் எவர்களுக்குக் கிட்டுகிறதோ, அவர்களே அதை வைத்துக்கொண்டு ஆளட்டும். சொத்தை தானம் செய்து விடு. அதுதான் நல்ல உபயோகம். எவருக்கும் உபயோகப்படாமல் வைத்துக் கொள்வது சரியல்ல" என்றாள் யசோதரா.

"சரி யோசிக்கிறேன். இதைத் தவிர வேறு வழி தோன்றவில்லையென்றால் பார்த்துக் கொள்வோம்" என்றான் சுந்தரம்.

32

மாலை ஆறு மணி இருக்கும். ராமநாத பாபு வராண்டாவில் போடப்பட்டிருந்த சாய்வு நாற்காலியொன்றில் உட்கார்ந்து நாவல் படித்துக்கொண்டிருந்தார். வராண்டாவிலேயே சிறிது தூரத்தில், ஒரு வேலைக்காரி ராமநாத பாபுவின் குழந்தையை வைத்துக்கொண்டு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தாள். ஹாலுக்குள் டெலிபோன் மணி அடித்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் த்வாரி வெளியே வந்து, "எசமான், விராஜகிசோர் பாபு போனில் உங்களைக் கூப்பிடறாருங்க" என்றான். ராமநாத பாபு எழுந்து உள்ளே போய் போனைக் கையில் எடுத்துப் பேசலானார்:— "ஹலோ, விராஜகிசோரா? என்ன சமாசாரம்?...இன்று இராத்திரியா? போனால் போச்சு! சரி நீ இப்பொழுதே இங்கே வந்து விடேன். சாப்பிட்டுவிட்டு இங்கிருந்தே போய் விடலாம்....ரைட்டோ!"

ராமநாத பாபு, த்வாரியைக் கூப்பிட்டு, "உள்ளே இன்றைக்கு ராத்திரி விராஜகிசோர் சாப்பிட வரப் போகிறார் என்று சொல்லு" என்று சொல்லியனுப்பினார். பிறகு வராண்டாவிற்கு வந்து மறுபடியும் நாவல் படிப்பதில் ஈடுபட்டார்.

அரை மணிக்கெல்லாம், விராஜகிசோர் தன் காரில் வந்து இறங்கினார். டிரைவரிடம் காரைத் திருப்பிக்கொண்டு போகுமாறு சொல்லிவிட்டு, நேரே ராமநாத பாபு உட்கார்ந்திருக்கும் இடத்தை அடைந்தார்.

"வா, கிசோர் உட்கார்" என்று ராமநாத பாபு வரவேற்றார், நாவலை மூடி வைத்தபடியே.

"என்ன அப்பா செய்துகொண்டிருக்கிறாய்?"

"ஒரு நாவல் படித்துக்கொண்டிருக்கிறேன்...ஆமாம் அதிருக்கட்டும், திடீரென்று உனக்கு என்ன, இன்றைக்கு சினிமாவுக்குப் போக வேண்டும் என்று தோன்றிற்று?"

"இரண்டு காம்பிளிமெண்டரி டிக்கட் கிடைத்தது. போய்விட்டு வருவோமே என்று எண்ணினேன்."

"அடே, நான் மறந்தே போய்விட்டேனே; நீ டிபுடி கலெக்டரோ இல்லையோ! அதனால்தான் இலவச டிக்கட் கிடைத்திருக்கிறதாக்கும்!"

"அதற்காக ஒன்றும் இல்லையப்பா! எனக்கு அந்த சினிமாக் கம்பெனிக்காரன் ரொம்ப வேண்டியவன், அனுப்பினான்."

"ஓகோ!"

விராஜகிசோரின் பார்வை பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்த ராமநாதபாபுவின் குழந்தையின் மேல் விழுந்தது. உடனே ராமநாத பாபுவுடன் பேசுவதை நிறுத்திவிட்டு, "டேய் போக்கிரிப் பயலே! என்னடா செய்து கொண்டிருக்கிறாய்? இங்கே வாடா" என்று கூப்பிட்டார்.

பையன் அவரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, இரண்டு கைகளையும் நீட்டிக் கொண்டு, தட்டுத் தடுமாறியவாறு நடந்து வந்தான். விராஜகிசோர், அவனைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு, முத்தமிட்டார். பிறகு ராமநாத பாபுவைக் காட்டி, "இது யார்? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"அப்பா!"

"அசட்டு அப்பா, நீ சொல்லு பார்ப்போம்"

"அசட்டு அப்பா!" என்றது குழந்தை.

(தொடரும்)

காலக்ஷேபம்

நல்ல காரணம்

டாக்டர்:—நான் கொடுத்த மருந்தால் உங்கள் குழந்தைகளுக்கு இருமல் தீர்ந்ததா?

வந்தவர்:—நன்றாய்த் தீர்ந்தது. நேற்று காலை ஒரு பையனுக்குத்தான் மருந்துகொடுத்தேன். இன்று எல்லாக் குழந்தைகளுக்குமே இருமல் நின்று விட்டது.

டாக்டர்:— அதெப்படி ஒரு பையனுக்கு மருந்து கொடுத்தால் மற்றப் பையன்களுக்கும் இருமல் நின்று விட்டது?

வந்தவர்:—மற்றப் பையன்கள் அந்த இருமல் மருந்தின் கசப்பைக் கேள்விப்பட்டுத் தாங்களாகவே இருமுவதை நிறுத்தி விட்டார்கள்!

—கே. என். ராமநாதன்.

பரவாயில்லை!

கீழே குடியிருப்பவர் (தூக்கம் கலைந்து ஆத்திரமாக):—ஏன் ஐயா! நான் இங்கே நாலு நாழியாகக் கத்திக் கொண்டிருக்கிறேனே, உங்கள் காதில் விழவில்லையா?

மேல் மாடியில் குடியிருப்பவர்:—பரவாயில்லை, ஸார்! நாங்களும் இங்கே சீட்டாடிக் கொண்டு ஏகச் சத்தம் போட்டுக் கொண்டுதான் இருக்கிறோம்! பேஷாய்க் கத்துங்கள்!

—எஸ். சுப்ரமண்யன்.

காரணம்

தாயார்:—ஏண்டா ராமு! குழந்தையை அழவிடறே, கேட்பதைக் கொடுத்துவிடேன்.

ராமு:—கொடுத்துட்டேன், அம்மா!

தாயார்:—பின்னே ஏன் அழுகிறது?

ராமு:—நான் கொடுத்த மிளகாயைக் கடிச்சுட்டு அழறது. அம்மா! —எ. பார்த்தசாரதி.

முன்னேற்பாடு

மாமனார் வீட்டிற்கு வந்திருந்த மாப்பிள்ளை கோபித்துக் கொண்டு, தம் பெட்டி சகிதம் தெருவுக்குப் போய், அங்கே நின்ற வண்டிக் காரனைப் பார்த்து, விறைப்பாக, "ஏன் அப்பா, ரயில்வே ஸ்டேஷனுக்குப் போவதற்கு என்ன வாடகை கேட்கிறாய்?" என்று கேட்டார்.

வண்டிக்காரன்:—வாடகை யெல்லாம் நேற்றே உங்கள் மாமனார் பேசிக் கையில் கொடுத்து விட்டாருங்க. நீங்க பேசாமல் ஏறி உட்கார்ந்து கொள்ளுங்க!

—ஆர். வெங்கட்ராமன்.

வாகனமே நான்!

கூட்டத்தில் இடிபடும் ஒருவர், "என்ன ஐயா! நான் சுப்ரமணிய ஸ்வாமி மயில் வாகனத்தில் உட்கார்ந்திருக்காப் போலே உட்கார்ந்திருக்கேன்; என்னை இப்படித் தள்ளுகிறீரே?" என்று கேட்டார்.

பதில்:—நீராவது மயில் வாகனத்தில் உட்கார்ந்திருக்கிறீர்; நான் அந்த மயில் வாகனமாகவே இருக்கிறேனே! —அம்பி.

பணத் தட்டு

முதல் நண்பன்:—நம்ம வேதகிரிக்கு ரொம்ப பணத் தட்டு என்று நினைக்கிறேன். முந்தா நாள் அவனிடம் நாலணாக் காசு இல்லை; நேற்றும் இல்லை; இன்றும் இல்லை.

இரண்டாம் நண்பன்:—ஏன்? உன்னிடம் கடன் வாங்கப் பார்த்தானா?

முதல் நண்பன்:—சே, சே! நான்தான் அவனிடம் நாலணா கடன் கேட்டுப் பார்த்தேன்.

—ஸ்ரீராமன்.



★

கெட்டிக்கார மாணவன்

விவசாயக் கல்லூரி மாணவன் (விவசாயியிடம்):—உங்களுக்கெல்லாம் விவசாய விஷயம் ஒன்றுமே தெரியாது. இந்த மரத்திலே உங்களுக்கு ஐம்பது மாங்காய்கூடக் கிடைக்கப் போவதில்லை!

விவசாயி:—இதில் ஒரு மாங்காய்கூடக் கிடைக்காதுங்க. இது கருவேல மரம்.

—எம். எஸ். துரைசாமி.

★



சேதமின்றி சலவை
செய்யப்பட்டது
அதோடு ஸன்லைட்டால்
வெண்மையாக்கப்பட்டது
—ஜாஸ்தி அழுக்குப் படிந்த இடங்கள் உள்பட
உங்கள் ஆடைகளில் பழக்கத்தால் சேதமடையுமிடங்களை கவனியுங்கள்! இவைதான் ஜாஸ்தி அழுக்குப்படியும் பாகங்கள். ஆடைகளை, சிறிது சோப்பைத்தேய்த்து தண்ணீரில் நனைத்து, அடித்துத் துவைப்பதால் அதிகமாக கெட்டுப்போகக் கூடிய இடங்களும் இவையே.
உங்கள் துணிகளை ஸன்லைட் முறைப்படி சுத்தம் செய்து அடித்துத் துவைப்பதனாலேற்படும் நாசத்தை விலக்குங்கள்.
ஸன்லைட்டின் ஏராளமான சுபமாக இயல்கிற நுரை, நனைந்த துணியில் புகுந்திக் காக்கினும் அதிகமாக அழுக்குப்படிந்துள்ள இடங்கள்கூட தூய வெண்மையாகிறது. இச்சுத்தமான சோப் உங்கள் துணிகளுக்கு தன்மையளிக்கிறது—அவைகளுக்கு இறகையொத்த அழகைக் கொடுக்கிறது. அன்றியும் உங்கள் கைகளை மிருதுவாகவும், மழமழப்பாகவும் வைத்துக்கொள்ளுகிறது.
இது
ஸன்லைட் முறைப்படி
சுத்தம் செய்தது!
SUNLIGHT
SOAP
ஸன்லைட்
சோப்
S. 90-33 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED



IODISAL
The best
BLOOD PURIFIER
MANUFACTURERS
SOUTH INDIAN MFG Co
MADURA
அயோடிசால்
மிகச் சிறந்த
ரத்த சுத்தி மருந்து
இது இரேகத்தில் உஷ்ணம் அதிகரித்து அதனால் ஏற்படும் ரோகங்களை குணப்படுத்தி இரேகத்திற்கு ஆரோக்கியத்தை கொடுக்கும்.
ரத்தத்தை சுத்திசெய்து ரத்த விருத்தியையும் உண்டாக்கும்.
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்
தயாரிப்பவர்கள்:
தீ சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை
ஏஜெண்டுகள் :—ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா; கிரிஜா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி; எம். கே. எ. ஹாஜா & கோ., 20, டாம் தெரு, கொழும்பு.




உலகெங்கிலும்
மிகவும் போற்றப்
பெற்றது!
ஸிரோலின்
'ரோச்'
சுவாஸகோச
உபாதைகளுக்கு சிறந்தது
SIROLIN

கஷ்டமான பிரச்னைக்கு ஒரு சுலபமான விடை

C-94TM



பிரச்னை: நான்கு தீக்குச்சிகளைக் கொண்டு செய்யக்கூடிய மிகச் சிறிய சதுரம் எது?



விடை: படத்தில் காட்டியுள்ளபடி, தீக்குச்சிகளின் தலைப்பாகங்கள் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு நோக்கி இருக்கும்படியாக அவைகளை அமைக்கவும்.

கல்விக்காகவாவது, விவாகச் செலவுகளுக்காகவாவது, வேலையிலிருந்து ஓய்வுபெற்ற காலத்திற்காகவாவது பணத்தைச் சேமித்துவைக்கும் பிரச்னையானது அநேகருக்கு மேலே சொன்ன பிரச்னையைப்போல் அவ்வளவு சுலபமானதல்ல. ஒரு ஸேவிங்ஸ் க்ரூப்பில் சேர்ந்துகொள்வது மூலமாய், சிறு சேமிப்புக்காரர்களுக்கான நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட் திட்டத்தில் கலந்துகொள்பவர்க்கு இப்பிரச்னையினால் சஞ்சலம் எதுவும் ஏற்படவேண்டிய அவசியமில்லை. நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள் பணத்தை மிகப் பத்திரமாய் சேமித்து வைத்திருப்பதுமல்லாமல், மிக உயர்ந்த விதப்படிக்கான வட்டியையும் தருகின்றன.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்.

இவை முக்கியமான அனுகூலங்களாகும் :—

1. நீர் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை 5, 10, 50, 100, 500, 1,000 அல்லது 5,000 ரூபாய்க்கு வாங்கலாம்.

2. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுள் ஒவ்வொருவரும் (அவர் பெரியவரா யிருந்தாலும் சரி மைனராயிருந்தாலும் சரி) 5,000 ரூபாய் வரையில் வாங்கமுடியும். இரண்டு பேர் கூட்டாக 10,000 ரூபாய் வரையில் வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சதவிகிதம் உயருகிறது. வட்டிக்குப் போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகிவிடுகிறது. இது யாதொரு கவர்ன்மெண்ட் பத்திரத்தின்மேல் கிடைக்கக் கூடிய மிக உயர்ந்த வட்டியாகும்.

4. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம் டாக்ஸ் செலுத்த வேண்டியதில்லை.

5. இவைகளை 3 வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில், 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

6. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம். இப்படி வாங்கிச் சேர்த்து வரப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக் கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக் கொள்ளலாம்.

7. இந்த ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபீஸ்களிலாவது கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம்பெற்ற ஏஜெண்டுகளிடமாவது ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக் கொள்ளலாம்.

உம்முடைய ஸேவிங்ஸ் க்ரூப்பில் இப்போதே சேரவும்



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladen's Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI டிஸம்பர் 8, 1946 4 அணா

REGD. NO. M. 4392



மதராஸ் ஸிடி ஏஜண்ட்ஸ்: சக்தி டிரேடிங் கம்பெனி
581, பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்


ஸ்ரீமதி P.A.
பெரியநாயகி
பாடிய
ஜயர் ப்ரொடக்ஷன்ஸ்
ருக்மாங்கதன்
டாக்கி பாட்டுகள்
N.18292 ஓம் நமோ நாராயணா
எல்லோருக்கும் எளிது
N.18293 ஆயே ஆயே
ஆனந்தம் பிரம்மானந்தம்
N.18294 துன்பமகலும்
வாரும் மன்னவா
HIS MASTER'S VOICE
எல்லா அத்தாட்சிபெற்ற
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்...
SAMUEL
"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"